விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com
சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 31 வெள்ளிக்கிழமை (16.08.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 240

# நீதியான தேர்தல்; அரசியல் தீர்வு!

## இரண்டையும் வலியுறுத்துகிறது இந்தியா



(கொழும்பு)
இலங்கை அரசு நிலையான அரசியல் தீர்வு குறித்து சர்வதேச சமூகத்திற்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். அதேவேளை வடக்குத் தேர்தல் நீதியான முறையில் நடத்தப்படும் என இந்தியா நம்புகிறது என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சிங்ஹா தெரிவித்துள்ளார். இந்தியாவின் 67 ஆவது சுதந்திரதினம் நேற்று கொண்டாடப்பட்டது. அதனை முன்னிட்டே கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தில் பேசிய இந்திய உயர் ஸ்தானிகர் இதனைத் தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## கடலினுள் வீழ்ந்து குடும்பஸ்தர் பலி

(கரவெட்டி)
வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் குடும்பஸ்தர் ஒருவர் கடலுக்குள் தவறிவீழ்ந்து பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் இரவு புதன்கிழமை வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் படகில் மீன்பிடிக்கச் சென்றபோது குடும்பஸ்தர் கடலுக்குள் தவறிவிழுந்து உயிரிழுந்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு சம்பியன் பற்றைச் சேர்ந்த ஜேக்கப்பு அன்ரன் (வயது 55) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் உடல் கூற்றுப் பரிசோதனைக்காகவும் மரண விசாரணைக்காகவும் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் வைக்கப் பட்டுள்ளது. (எ-9, 24)

## நீரில் மூழ்கி சிறுவன் பலி

(சிவநகர்)
கிணற்றுக்குள் தவறிவிழுந்த சிறுவன் ஒருவன் நீரில்மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி ஊத்துக்குள கிராமத்தில் நேற்று காலை 10 மணியளவில் மேற்படி சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தினைச் சேர்ந்த கு.டினோஜன் (வயது 7) என்ற சிறுவனே உயிரிழந்தவனாவான்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி அரசின் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனை (19ஆம் பக்கம் பார்க்க)

## அழுகி வரும் கிழங்காக மகிந்த அரசு மாறியுள்ளது
### மௌபிம மக்கள் கட்சி சாடல்

(கொழும்பு)
மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அழுகிவரும் கிழங்காக மாறியுள்ளது என மௌபிம மக்கள் கட்சியின் தலைவர் ஹேமகுமார நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஹபராதுவ பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கம் தனது வங்குரோத்து நிலைமையை உணர்ந்துள்ளது. அரசாங்கத்தின் முட்டாள்தனமான செயற்பாடுகள் காரணமாக மக்கள் அரசாங்கத்திடம் இருந்து வேகமாக விலகி வருகின்றனர்.

அரசாங்கம் வீழ்ச்சியடைந்துள்ளதை உணர்ந்துள்ளது. பௌத்தர்கள் என தம்மை கூறிக் கொள்பவர்கள் மோதல்களை உருவாக்கி வருகின்றனர்.

பௌத்த தர்மத்திற்கு முரணாக செயற்படுவர்களை பயன்படுத்தி அரசாங்கம் முஸ்லிம் மக்களுடன் முரண்பாடுகளை தோற்றுவித்து கொண்டுள்ளது.

அமைச்சர்கள் கலந்து கொள்ளும் கூட் (19ஆம் பக்கம் பார்க்க)

## பத்ரகாளி கோவிலை அகற்ற முயற்சி!

(கொழும்பு)
தம்புள்ள, கண்டலம சந்தியிலுள்ள மகா பத்ரகாளி கோவிலை அகற்றுவதற்கான முயற்சிகள் மீண்டும் அரங்கேற்றப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த கோவிலின் சிலையை எடுத்துச் செல்வதற்கான முயற்சிகள் நேற்று வியாழக்கிழமை இரவு மேற கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 31 வருடங்களாக இயங்கி வந்த இந்தக் கோவிலில் இறுதி 13 வருடங்கள் தேர்த் திருவிழாவும் இடம்பெற்று வந்துள்ளது.

இந்த நிலையிலேயே தற்போது குறித்த (19ஆம் பக்கம் பார்க்க)

## எலும்புக் கூட்டுத் தொகுதிகள் மீட்பு?

(நெல்லியடி)
வடமராட்சியின் புலோலிப் பகுதியில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட பல்லப்பை கிராமத்தில் கிணறு ஒன்றில் இருந்து 17 இற்கும் மேற்பட்ட மனித எலும்புக் கூட்டுத்தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் குறித்த எலும்புக் கூடுகள் மீட்பு தொடர்பான எந்தத் விபரங்களையும் பொலிஸாரோ, சட்ட வைத்திய அதிகாரியோ அல்லது இராணுவத்தினரோ உறுதி செய்யவில்லை.

அண்மையில் புலோலிப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் தமது மூடப்பட்ட கிணறுகளை அகழ தொடங்கியிருந்தனர். அவ்வாறு அகழும் பணிகள் நடந்து கொண்டிருக்கையிலேயே மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன என்றும் எனினும் அவை சீருடைத் (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண காப்பற் வீதிகளில் தேர்தல் சின்னங்களுக்கு தடை
### யாழ்.மாநகரசபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)
காப்பற் வீதிகளில் தேர்தல் சின்னங்களையோ வேட்பாளர் பெயர்களையோ பதிவு செய்வதனை தவிர்த்துக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை கோரியுள்ளது.

இவ் அறிவித்தலினை மீறி செயற்பட்டால் வேட்பாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அறிவித்துள்ளார்.

வீதிகளில் வேட்பாளர் பெயர் விபரங்களினை வர்ணம்தீட்டி பதிவு செய்வது முறையானதா? என முதல்வரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வீதிகளினை தேர்தல் பிரசாரத்திற்காக பயன்படுத்துவதனை அனைத்து கட்சி வேட்பாளர்களும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

வீதிகள் அனைத்தும் மக்களின் போக்குவரத்துக்காகவே செப்பனிடப்பட்டுள்ளன. அதனை யாரும் தவறாகப் பயன்படுத்த வேண்டாம்.

எமது வீதிகளினை நாங்களே பாதுகாக்க வேண்டும், இது மக்களுடைய சொத்து என்றார் மாநகர முதல்வர்.

இதேவேளை யாழ் பிரதான வீதி, கண்டி வீதி, யாழ்.நகரப்பகுதியில் பல இடங்களில் காப்பற் வீதிகளில ஆளுங் கட்சியில் போட்டியிருக்கின்ற வேட்பாளர் ஒருவரது பெயர், இலக்கம் என்பன வர்ணம்தீட்டப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## அனுராதபுரம் பள்ளிவாசல் அகற்றப்பட்டது!

(கொழும்பு)
அனுராதபுரம், மல்வத்து ஓயா லேன் பள்ளிவாசல் அனுராதபுரம் மாநகர சபையினரால் நேற்று அகற்றப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய இந்த பள்ளிவாசல் தொடர்பில் கடந்த பல மாதங்களாக அனுராதபுரம் மாநகர சபைக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் பேச்சு இடம் பெற்று வந்துள்ளது.

எனினும் இந்த பேச்சுவார்த்தை கடந்த யூலை மாதத்தில் தோல்வியில் [illegible] (19ஆம் பக்கம் பார்க்க)

## 'லக்ஸபான' மின்சாரம் இன்று யாழிற்கு வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)
லக்ஸபான மின்சாரம் இன்று யாழ்.மாவட்டம் முழுவதும் வழங்கப்படவுள்ளதாகவும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் இரண்டு வாரத்திற்குள் 24 மணித்தியாலமும் தடையற்ற மின்சாரம் யாழ். மாவட்டம் முழுவதும் வழங்கப்படுமெனவும் இலங்கை மின்சார சபையின் வடமாகாண பிரதி பொது முகாமையாளர் டி.கே.பி.யு. குணதிலக தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நண்பகல் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் (சுமார் 23 வருடங்களுக்குப்பின்) யாழ். குடாநாடு முழுவதும் இன்று காலை தொடக்கப் பரீட்சார்த்தமாக லக்ஸபான மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் முதல் இரண்டு வாரத்திற்குள் லக்ஸபான மின்சாரத்தின் ஊடாக தடையற்ற மின்சாரத்தை 24 மணித்தியாலமும் யாழ்.குடாநாட்டில் வழங்க இலங்கை மின்சார சபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

சுன்னாகத்திலுள்ள மின்சார நிலையத்தின் ஊடாக லக்ஸபான மின்சார விநியோகம் இன்று பரிசார்த்தமாக இடம்பெறுவுள்ளது.

ஏற்கெனவே யாழ்.மாவட்டத்தில் நல்லூர் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# அமைச்சர் டக்ளஸின் இணைப்பாளராக ஜெகன்

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்பாளராக, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.வி.குகேந்திரன் (ஜெகன்) நியமிக்கப்பட்டுள்ளார்.

1997களில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளராக இருந்த கே.வி.குகேந்திரன், 2000ஆம் ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.



சில வருடங்கள் வெளிநாட்டில் தங்கியிருந்த அவர், மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு வந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்பாளராக இணைந்துள்ளார். (ந)


# PATRICIAN INSTITUTES

## பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

## புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பமாகின்றன

**ஆரம்பம் : 27-08-2013**

### 1. COMPUTER COURSES (கணனி பயிற்சிநெறி)

| | | |
|---|---|---|
| A. | Advanced in Computer Programming | Duration 8 Months |
| B. | Diploma in Microsoft Office | Duration 4 Months |
| C. | Diploma in Desk Top Publishing | Duration 4 Months |
| D. | Diploma in Video Editing | Duration 4 Months |
| E. | Diploma in Type Setting | Duration 3 Months |
| F. | Diploma in Computerized Accounting | Duration 4 Months |
| G. | Diploma in Software Engineering | Duration 6 Months |
| H. | Diploma in Micro Media | Duration 4 Months |
| I. | Diploma in web Multimedia | Duration 4 Months |
| J. | Professional Diploma in Graphic Design | Duration 6 Months |
| K. | Computer Hardware Technology | Duration 4 Months |
| L. | Internet & E. mail | Duration 1 Months |
| M. | General Information Technology (GIT) | Duration 4 Months |
| N. | Information & Communication Technology (ICT) | Duration 4 Months |

2. **Short Hand typing (English)** சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) கணனி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.
3. **Short Hand Typing (Tamil)** சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) கணனி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.
4. **Sewing** (தையல்)
5. **General Moto Mechanism)** மோட்டார் வாகன திருத்தல்)
6. **General Electrician** (ஜெனரல் எலக்ரீசியன்)
7. **Lathe Machine Operation** (கடைச்சல் இயந்திரப் பயிற்சி)
8. **Arc Welding** (மின் ஒட்டுநர் பயிற்சி
9. **Carpenter** (மரவேலை)
10. **Refrigeration and Air Conditioning** (குளிர் சாதனப்பெட்டி திருத்தல்)
11. **General Motor Cycle Mechanism** (மோட்டார் சைக்கிள் திருதல்)

மேலதிக விபரங்களுக்கு :

Registrar,
61, (59), St. Patrick's Road, Jaffna.
T. P : 021 222 6148 , Fax : 021 222 6148
e.mail : patricianjaffna@yahoo.com (C-4337)



## COMPUTER AND ACCESSORES SALES, 30% OFFER

| | | |
|---|---|---|
| 4GB Pendrive : 850 | Intel Mother Board : 7950 | ATX Casing Tower : 2650 |
| 8GB Pendrive : 1150 | Intel Processor 2.9GHz : 8500 | 2GB DDR III Ram : 2850 |
| 16GB Pendirve : 1750 | Intel I-3 Processr 3.3GHz : 16850 | 4GB DDR III Ram : 4950 |
| 32GB Pendrive : 3350 | 500 GB Toshiba HDD : 7550 | 500GB Laptop HDD : 7900 |
| 7.2 Multy Dongle : 2950 | 500 GB Westrn Dig HDD : 7850 | Samsung DVD Writer : 2750 |
| Laser Mouse from : 250 | 1TB Westrn Digital HDD : 10750 | 450W Power Supply : 1550 |
| Keyboard from : 480 | 19" Samsung Led Monitor: 12500 | 3in1 Sams Laser Printer: 23750 |
| Wirless Key&Mous:1850 | 19" HP Led Monitor : 12750 | P-4 3rd Gen Full Set : 48850 |
| 10MP Webcam from : 775 | 19" AOC Led Monitor : 12400 | 3rd Gen Laptop from : 55850 |
| Laptop Coolar Pad : 850 | 19" View Sonic Monitor : 12600 | 3rd Gen I-3 HP Laptop: [illegible] |

(சி-4338)

NORTH LEAD COMPUTER & ACCESSORIES WHOLESALER
No: 328, Stanly Road, Jaffna (ஆரியகுளம் சந்திக்கு அருகில்) Tel : 021-222 4459, 0772533390


# நாய்க்கடிக்கு இருவர் இலக்கு

(சிவநகர்)

கொடிகாமம் பிரதேசத்திலுள்ள தவசிக்குளம் கிராமத்தில் கட்டாக்காலியாக திரிந்த நாயினால் நேற்று வியாழக்கிழமை மதியம் இரு இளைஞர்கள் கடியுண்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பிரதேசத்தில் வீதியில் கட்டாக்காலியாக திரிகின்ற நாய் நேற்று மதியம் இரு இளைஞர்களை கடித்துள்ளது. நாயினை பிரதேச மக்கள் பிடிக்க முற்பட்ட போதிலும் பிடிபட வில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நாய் விசர் நாயாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது.(செ-9,254)

# கழிவு ஓயில் வீச்சு!

(பருத்தித்துறை)

வடமராட்சி அல்வாய் வடக்குப் பகுதியிலுள்ள இளங்கோ சனசமூக நிலையக் கட்டடத்தில் விஷமிகளால் கழிவு ஓயில் ஊற்றப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு புதன்கிழமை இடம் பெற்றுள்ளது.

இதனையடுத்து அப்பிரதேச வாசகர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.(செ-9,10)

# துவிச்சக்கர வண்டி திருட்டுப் போனது

பருத்தித்துறை புலோலி வடக்கு ஓடை ஒழுங்கைப் பகுதியில் நேற்று முன்தினமிரவு புதன்கிழமை வீட்டு முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டி களவாடப்பட்டுள்ளது.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (செ-9,10)


## பிள்ளையார் இன்

சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும். 6 - 10 pm - 250/=

தினமும் **12 மணிமுதல் 3 மணிவரை** மிகச் சிறந்த சைவ, அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.

**சைவ உணவு: 150/-** **அசைவ உணவு 180/-**

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(சி-4335)


முன்னாள் பூநகரி பனை தென்னை வள அ.பி.கூ.ச தலைவர் அமரர் கிருஷ்ணன்

## பரமலிங்கம் அவர்களின்

## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணுலகில்: 16.05.1943
விண்ணுலகில்: 31.07.2009



பண்பின் சிகரம் நீங்கள் அப்பா
பாசத்தின் உறைவிடம் அப்பா நீங்கள்
ஊர் போற்ற புகழ வாழ்ந்தீர்கள்
எம்மை ஊட்டி உயரவே வைத்தீர்கள்
பண்புக்கு இலக்கணம் வகுத்து பாங்காகவே
எம்மை வாழ வழி காட்டினீர்கள்
மக்கள் தொண்டனாய் பொது சேவையில் கால் பதித்தே
தொழிலாளர் தலைவனாய்
அல்லும் பகலும் சேவை செய்தீர்கள்
அவர்கள் வாழ்வின் உயர்வுகண்டு மகிழ்ந்தீர்கள்
நாலாண்டு சென்றாலும் நாம் உம்மை
மறவோம் ஊர் போற்றுகிற்து உறவு நாம்
பேதலித்து நிற்கின்றோம்

ப.இராசேஸ்வரன், (மகன்)

(3622)

# மரண அறிவித்தல்

## திருமதி அக்னஸ் புலோரன்ஸ் சொலமன் (வயலட்)



மாட்டின் வீதியைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அக்னஸ் புலோரன்ஸ் சொலமன் (வயலட்) நேற்று முன்தினம் *(14.08.2013)* புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோன் எட்வேட் ஹெஸ்லர் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ராஜதுரை சொலமன் தம்பதியரின் அன்பு மருமகளும், ஜோ.கிருபைச் சந்திரதாஸ் சொலமன் அவர்களின் அன்பு மனைவியும், Rev திருமதி மாளின் லோறேன் சகாயன் (அசெம்பிளி ஒப் கோட், ஆரையம்பதி), ரவி லிங்கன் சொலமன் (றெனி மூக்குக் கண்ணாடி உரிமையாளர்),போதகர் ஜூட் எடிசன் சொலமன்(அசெம்பிளி ஒப்கோட் திகன) ஆகியோரின் பாசமிகு தாயாரும், Rev லூயிஸ்பிள்ளை சகாயன், திருமதி சுஜித்தா ரவிலிங்கன் சொலமன் (ஆசிரியை-யாழ்.வேலணை மத்திய கல்லூரி), திருமதி அனுஷா ஜூட் சொலமன் ஆகியோரின் அன்பு மாமியும்,காருண்யா ஷேரன், ஷெரான், ஷிகான்டானியல், ஷாரோணி, ஜெத்ரோ, ஜொஷாயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற எலிசபேத் மேரி மாக்ரட் மற்றும் மேரி செல்வராணி (செல்லா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நேற்று (15.08.2013) வியாழக்கிழமை பி.ப 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

54/20, விதானையார் வீதி,
சுண்டுக்குளி.

தகவல்:
J.K.E சொலமன்(கணவன்),
R.L சொலமன்(மகன்),
0212228503

(சி-4320)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## வெற்றியின் இரகசியம்

சில பேருக்குத் தொட்டதெல்லாம் வெற்றியாக முடியும். சில பேருக்கு தொட்டதெல்லாம் தோல்வியாக முடியும்.

இதிலுள்ள இரகசியம் என்ன?

அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் இந்தக் கதையை நீங்கள் படியுங்கள்.

ஜப்பானில் பெரிய வீரர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் நொபுநாகா.

அவரிடம் படைவீரர்கள் அதிகளவில் இல்லை. சிறிய படைப்பலத்தை வைத்துக் கொண்டு பெரிய பெரிய படைகளையெல்லாம் அவர் முறியடித்திருக்கிறார்.

அவ்வளவு சாமர்த்தியம் உள்ளவர் நொபுநாகா.

ஒரு சமயம் அவர் எதிரியின் மீது படையெடுத்துச் சென்றிருந்தார்.

அப்போது அவருடைய படைவீரர்களுக்கும் தளபதிக்கும் ஒரு சந்தேகம் வந்துவிட்டது.

இந்தப் போரில் நாம் வெற்றி பெற முடியுமா? என்பது தான் அவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகம்.

இருந்தாலும் இதை எப்படி தலைவரிடம் தெரிவிப்பது?

மிகவும் யோசனை செய்தார்கள். கடைசியாக துணிச்சலை வரவழைத்துக் கொண்டு மெதுவாக கேட்டு விட்டார்கள்.

தலைவர் நொபுநாகா பார்த்தார். அவர், "சரி! அதை நாம் முடிவு செய்ய வேண்டாம். புத்த விகாரைக்குப் போய் விட்டு வருவோம்'' 'பூவா, தலையா' போட்டுப் பார்ப்போம். என்ன வருகிறதோ அதன்படி செயற்படுவோம். ஏனென்றால் போருக்குச் செல்லும் போது முழு மனத்தோடு போக வேண்டும். மனதில் தடுமாற்றம் இருக்கக் கூடாது'' என்று கூறினார்.

அவர் கூறியதற்கு தளபதியும் படைவீரர்களும் "சரி" என ஒப்புக் கொண்டார்கள்.

உடனே அவர்கள் எல்லோரும் அங்கே இருந்த கோவிலுக்கு சென்றார்கள்.

தலைவர் உள்ளே சென்றார். நீண்ட நேரத்தின் பின்னர் தலைவர் நொபுநாகா வெளியே வந்தார்.

அவர் தளபதி-துணைத் தளபதிகள் எல்லோரையும் அருகில் அழைத்தார்.

அவர்கள் முன்னிலையில் ஒரு தங்கக்காசை எடுத்தார். "இதோ பாருங்கள்... இப்போது 'பூவா, தலையா' போட்டுப் பார்க்கலாம். பூ வந்தால் தோற்று விடுவோம். தலை வந்தால் வெற்றி பெறுவோம். பூ விழுந்தால் போர் வேண்டாம்... அதை தவிர்த்து விடுவோம். தலை விழுந்தால் போருக்கு போவோம். விதி இப்போது நம் கையில் தான் இருக்கிறது. இங்கே என்ன தீர்ப்பு கிடைக்கிறதோ அதன்படியே நாம் நடந்து கொள்வோம்'' என்று கூறி தங்கக் காசைச் சுண்டினார்.

அது சுழன்று மேலே போய் "கணீர்'' என்று தரையில் விழுந்திருந்தது.

எல்லோரும் ஆவலோடு அதைக் குனிந்து பார்த்தார்கள். தலைதான் விழுந்து கிடந்தது.

அனைவருக்கும் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்... அதன் பின் அவர்களுக்குப் போருக்குப் போவதா வேண்டாமா? என்ற சந்தேகம் வரவில்லை.

எல்லோரும் உறுதியான முடிவோடு போருக்குச் சென்றார்கள். வெற்றியோடு திரும்பி வந்தார்கள்.

அப்போது தளபதி உரை நிகழ்த்தினார்.

அதில் அவர் "இந்த வெற்றியைத் தங்க நாணயம் தான் முடிவு செய்தது... அதனால் விதியை யாராலும் வெல்ல முடியும்?'' என்று கூறினார்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? வெற்றியின் இரகசியம் என்ன? மனவுறுதிதான்.

எதைச் செய்தாலும் மனக்குழப்பம் இருக்கக் கூடாது. "எண்ணித் துணிகருமம்'' இது வள்ளுவர் வாக்கு.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# அனலைதீவு மற்றும் எழுவை தீவுகளுக்கு விரைவில் தடையற்ற மின்சாரம்

## இ.மி.ச.வட.பிரதி முகாமையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அனலைதீவுக்கும் எழுவை தீவுக்கும் விரைவில் 24 மணி நேரமும் தடையற்ற மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை மின்சார சபையின் வட மாகாண பிரதி பொது முகாமையாளர் டி.கே.பி.யு. குணதிலக தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண நகர்ப்பகுதியில் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபையின் வட மாகாண பிரதி பொது முகாமையாளர் அலுவலகத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் தீவகப் பகுதிக்கு மக்களின் நீண்டகாலக் கோரிக்கைக்கு அமைவாகவும் அரசியல் வாதிகளின்வேண்டுகோளுக்குஇணங்கவும் இலங்கை மின்சார சபையினரால் தீவகப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

தீவகப் பகுதிகுயிலுள்ள சகல இடங்களுக்கும் 24 மணி நேர மின்சாரம் இதுவரை வழங்கப்படவில்லை.

எனினும் நயினாதீவு, நெடுந்தீவு ஆகிய தீவுப்பகுதிகளுக்கு தற்போது 24 மணிநேரமும் தடையற்ற மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

இவை தவிர விரைவில் அனலைதீவு, எழுவை தீவுப் பகுதிகளுக்கும் தடையற்ற மின்சாரத்தை 24 மணி நேரமும் வழங்க இலங்கை மின்சார சபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

கடந்த கால யுத்த அழிவுகள் காரணமாக உடனடியாக அனைத்துப் பகுதிகளுக்கும் 24 மணி நேர மின்சாரத்தை வழங்க முடியாதுள்ளது.

குறிப்பாக தீவகப் பகுதிகளுக்கு மின்சாரத்தை உடனடியாக வழங்க முடியவில்லை.

இருப்பினும் மிக விரைவில் மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு தீவுப்பகுதிகளுக்கும் 24 மணிநேர தடையற்ற மின்சாரத்தை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். (அ-6)

# யாழ்.மாநகர சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் ஒரு வருடம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்கபட்டுள்ளது என உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாஉல்லா அறிவித்துள்ளார்.

இதன்படி 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும். யாழ். மாநகர சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்(2) ஆம் உப பிரிவின் (ஆ) பந்தியினால் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு யாழ். மாநகர சபை உறுப்பினர்களின் பதவிக் காலம் மேலும் ஒரு வருடத்துக்கு நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (அ-4)

# ஸ்ரீவாகீஸ்வரி முன்பள்ளி விளையாட்டு விழா

(கோண்டாவில்)

ஸ்ரீவாகீஸ்வரி சனசமூக நிலையம், விளையாட்டுக் கழகம், கல்வி வளர்ச்சிக் கழகம் மற்றும் கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் ஸ்ரீ வாகீஸ்வரி முன்பள்ளி விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி முன்றிலில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீ வாகீஸ்வரி நிலைய தலைவர் கு.முருகையா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் மற்றும் அவரது பாரியார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 50 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 80 | 80 |
| தக்காளி | 60 | 40 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 50 |
| கோவா | 60 | 70 | 100 | 100 |
| கரட் | 100 | 100 | 140 | 140 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 |
| புடோல் | 30 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 140 | 140-160 | 160 |
| பெரிய வெங்காயம் | 160 | 100 | 120 | 140 |
| பாகற்காய் | 60 | 80 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 70 | — | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 | 60 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 20 | 30 | 40 | 40 |
| கறிமிளகாய் | 60 | 70 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 40 | 80 | 120 | 80 |
| போஞ்சி | 160 | 100 | 100 | 160 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | 250 | 200 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | [illegible] | 40 | 40-45 | 30-40 |
| இராசவள்ளி | 100 | 90 | 120 | 120 |

# இராசி பலன்

16.08.2013

(ஆடி 31, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு

தசமி முன்னிரவு 7.47 மணிவரை

கேட்டை முன்னிரவு 8.47 மணிவரை

இராகுகாலம் 10.35-12.55 மணிவரை

சுபநேரம் 6.05-7.35 மணிவரை

வரலட்சுமி விரதம்

**மேடம்** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், வேலைச்சுமை கூடும், உடல் நலனில் கவனம் தேவை, விரயங்கள் மேலோங்கும், கௌரவக் குறைவான நாள்.

**இடபம்** பெண்களால் பெருமை வந்து சேரும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்** வியாபார விருத்தி ஏற்படும் நாள், கடனில் ஒரு பகுதியை கொடுத்து உதவும் வாய்ப்புண்டு, ஆரோக்கியம் சீராகும் தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்** நீண்ட நாள் ஆசையொன்று நிறைவேறலாம், தொழிலை விருத்தி செய்வதில் முனைப்பு காட்டுவீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**சிங்கம்** பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையில் உதவிகள் கிடைக்கலாம், பெற்றோரின் தேவைகளை நிறைவு செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**கன்னி** உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சகோதர வழியில் அனுகூலமுண்டு.

**துலாம்** புத்திசாதூரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், உறவினர் பகை அகலும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும், அரசியல் வாதிகளால் அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**தனுசு** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, தொழில் நன்மை கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனைகளை பெறுவீர்கள், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

**மகரம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வருமானம் திருப்தி தரும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** அருமையான நாள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், என்றோ நடக்கும் என நினைத்த காரியமொன்று இன்று நடைபெறலாம்.

**மீனம்** தேக நலன் சீராகும், சொத்து தகராறுகள் நல்ல முடிவுக்கு வரும், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், புதிய திட்டங்கள் கைகூடும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முறைப்பாட்டை பதிவதில் தாமதமா? பொறுப்பதிகாரியிடம் முறையிடுக

(கரவெட்டி)

வடமராட்சி பொலிஸ் நிலையங்களில் முறைப்பாட்டிற்குச் செல்லும் மக்களிடம் 15 நிமிடங்களுக்குள் முறைப்பாட்டை பதிவு செய்யாத பொலிஸ் உத்தியோகத்தர்கள் பற்றி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் முறையிடுமாறு பொலிஸ் நிலையத்தில் எழுதி காட்சிப்படுத்தப் பட்டுள்ளது.

இந்த பிரதேசத்தில் கடந்த காலங்களில் பொலிஸ் நிலையங்களுக்குச் செல்லும் மக்களை பொலிஸ் உத்தியோகத்தர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வைக்கும் நிலை இருந்து வந்தது.

இது தொடர்பாக மக்களால் விசனம் தெரிவிக்கப்பட்டதையடுத்து, மேற்படி நடைமுறை வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையங்களுக்குச் செல்லும் மக்கள், தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள அதிக நேரம் காத்திருக்க வேண்டிய அவசியம் இனி இல்லையெனவும், மாறாக பொலிஸ் உத்தியோகத்தர்கள் செயற்பட்டால் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் முறையிடுமாறும் அவ் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-9-24)



# வாகன பாதுகாப்பு நிலையங்கள் அதிக பணம் அறிவிட்டால் நடவடிக்கை

## மாநகரசபை முதல்வர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**நல்லூர் கந்தசாமி ஆலய சுற்றுப்புறச் சூழலில் இயங்கும் வாகன பாதுகாப்பு நிலையங்கள், யாழ்.மாநகர சபையால் விதிக்கப்பட்ட கட்டணத்தை விட மேலதிகமான கட்டணத்தை அறிவிட்டால், அவர்களின் வாகன பாதுகாப்பு நிலைய உரிமம் இரத்துச் செய்யப்படும் என யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அறிவித்துள்ளார்.**

அதன்படி துவிச்சக்கர வண்டியொன்றுக்கான பாதுகாப்பு கட்டணம் 5 ரூபா எனவும் மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு கட்டணம் 10 ரூபா எனவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இந்த கட்டணக் கட்டுப்பாட்டை மீறுபவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, அவர்களின் நிலைய உரிமமும் இரத்துச் செய்யப்படும்.

அதிகரித்த கட்டணம் பற்றி பக்தர்கள் அறியும் பட்சத்தில் அதனை உடனடியாக தமக்கு தெரியப்படுத்துமாறும் முதல்வர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பில் மாநகரசபை முதல்வர் மேலும் தெரிவிக்கையில், நல்லூர் ஆலய சூழலில் இயங்கும் வாகன பாதுகாப்பு நிலையங்கள் கடந்த இரு திருவிழாக்களின் போதும் துவிச்சக்கரவண்டிக்கு 10 ரூபாவும் மோட்டார் சைக்கிளுக்கு 20 ரூபாவும் சட்ட விரோதமான முறையில் அறவிட்டுள்ளன.

இதனையடுத்த வாகன பாதுகாப்பு உரிமையாளர்களை அழைத்து மாநகரசபை கலந்துரையாடியது.

இதன்போது மாநகர சபையின் அறிவுறுத்தலுக்கு அமையவே மேற்படி கட்டணங்களை அறிவிடுமாறு கூறப்பட்டிருந்தது.

இதனையும் மீறி அதிக கட்டணம் அறிவிடப்படுமாயின் அவர்களின் நிலைய அனுமதி பறிக்கப்படும்.

சில பாதுகாப்பு நிலையங்கள் நாணய குற்றிகள் இல்லை எனக் கூறி 10 ரூபா என்றும் 20 ரூபா என்றும் அறவிடுகின்றனர். இதுவும் மாநகர சபை சட்ட விதிகளுக்கு முரணானதாகும்.

பாதுகாப்பு நிலையத்தில் வாகனங்களை விட்டுச் செல்பவர்களுக்கு மிகுதிப்பணத்தை கொடுக்க வேண்டியது நிலையத்தினருடைய கடமையாகும்.

இதேவேளை, நல்லூர் ஆலயச் சூழலில் பாட்டுக்களை சத்தமாக ஒலிக்கச் செய்வதை அனைவரும் நிறுத்துவதோடு, சினிமாப் படல்களை ஒலிக்கவிடுவதையும் மாநகர சபை முற்றாக தடைசெய்துள்ளது.

தற்போது கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் மாணவர்களின் நலன்கருதி பாடல்கள் சத்தமாக ஒலிக்கவிடுவதை நிறுத்துமாறும் முதல்வர் கோரியுள்ளார்.

மேலும் ஆலயத்திற்கு வருகின்ற அடியார்கள் தமிழ்பண்பாட்டு கலாசாரத்திற்கு ஏற்றவாறு ஆடையணிந்து வரவேண்டும். தமிழர்களாகிய எமக்கு பாரம்பரிய கலாசாரம் ஒன்று உண்டு.

ஐரோப்பிய இனத்தவர்கள் ஆலயத்திற்கு வருகை தரும் போது தமிழ் இந்து கலாசாரத்துடன் வருகின்றனர். ஆனால், எம்மில் சிலர் மேற்கத்தேய ஆடைகளுடன் ஆலயத்துக்குச் செல்கின்றனர். ஒரு சிலரின் செயற்பாடுகளால் ஒட்டு மொத்த தமிழ் சமூகமும் தலைகுனிய வேண்டியுள்ளது. ஆகவே, இன, மத, வேறுபாடி இன்றி இந்து ஆலயத்திற்கு எவ்வாறு செல்லவேண்டுமோ அவ்வாறான கலாசார உடையுடன் அனைவரும் செல்லுங்கள் என்றார் முதல்வர். (அ-4)




31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு: 26.01.1975
இறப்பு: 17.07.2013

**அமரர் ஜெயாகரன் பத்மலோஜினி**

உன்மடியம்மா உள்ளம் அலைகிறதே...
உன்னைத் தழுவிட்டே உள்ளம் துடிக்கிறதே
அன்பான அம்மா ஆருயிர் நீதானே
அகன்றாய் எமைவிட்டு யார் எமக்கு உதவியென
இன்பம் இனி வருமோ இதயம் தாங்கிடுமோ..

கடந்த 17.07.2013 புதன்கிழமை இறைபதம் அடைந்த் எங்கள் அன்புத் தாய் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 16.08.2013 வெள்ளிக்கிழமை காலை சந்நிதி முருகன் தீர்த்தக் கரையில் கிரியைகள் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'வளர்மதி', கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.
தொ.பே: 0771580754

தகவல்:
குடும்பத்தினர்

## அந்தியேட்டி அழைப்பிதழ்



தாய் மடியில்: 22.11.1961
அமரர்
இறை அடியில்: 17.07.2013

**இராசையா உதயமனோகரன்**

அன்புடையீர்!

கடந்த 17.07.2013 அன்று சுவிஸில் சிவபதமடைந்த எமது குடும்பக் குத்துவிளக்கு அமரர் இராசையா மனோகரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 16.08.2013 இன்று அன்னாரின் சுவிஸில் உள்ள இல்லத்திலும் இ.திருமுருகன் (கோட்டைக்காடு, மல்லாகம்) அவர்களின் இல்லத்திலும் நடைபெறும். எனவே அன்றைய தினம் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: இளையவி திருமுருகன்
குடும்பத்தினர்
அத்திகூடி, வீதி, கந்தர்மடம். (3615)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆம் திருத்தச் சட்டத்தை இலங்கை மாற்றுவது இந்தியாவுக்கு அவமானம்

## வீ. சூரியநாராயணன் தெரிவிப்பு

(கொழும்பு)

**13 ஆவது திருத்தச் சட்டம் மாற்றி அமைக்கப்படுமாயின் அது இலங்கை அரசாங்கம் இந்தியாவின் முகத்தில் அறைந்ததுக்கு சமமானது. இவ்வாறு முன்னாள் ஆசிய ஆராய்வு மையத்தின் இயக்குநர் வீ. சூரியநாராயணன் தெரிவித்துள்ளார்.**

த டெய்லி டெலிகிராப்பிற்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

13 ஆவது திருத்தச் சட்டம் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்கு மிகவும் முக்கியமான ஒன்று. அதனை மாற்றி அமைப்பதும் மாற்றி அமைப்பதற்கு இந்தியா அனுமதிக்கின்றமையும் ஏற்றுக் கொள்ள முடியாத விடயம்.

இலங்கை அரசாங்கத்தின் இந்த போக்கு இந்தியாவின் கட்டுப்பாட்டை மீறி செல்வதாக அமைகிறது என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை இலங்கையைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் இந்தியா பாகிஸ்தானுடன்கூட தோற்றுள்ளதாக த டெய்லி டெலிகிராப் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் தமது அண்டைய நாடுகளின் கட்டுப்பாட்டை சிறந்த முறையில் பேணிவருகிறது.

ஆனால் இலங்கையின் கட்டுப்பாட்டை இந்தியா படிப்படியாக இழந்து வருகிறது. 13 ஆம் திருத்தச் சட்டம் இந்திய-இலங்கை உடன்படிக்கையின் அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால் அது பலவந்தமாக தங்களிடம் திணிக்கப்பட்டதாக இலங்கை அரசாங்கம் தற்போது கூறுவதுடன் இதனை மாற்றி அமைப்பதற்கான முயற்சிகளையும் தற்போது மேற்கொண்டு வருகிறது.

இது இந்தியா இலங்கையை கட்டுப்படுத்த தவற விட்டது என்பதை எடுத்துக் காட்டுகிறது என்று அந்த இணையம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# 13 என்னும் நகைச்சுவை நாடகத்தில் நடித்தவர்கள் எங்கே போனார்கள்

## கயந்த எம்.பி.கிண்டல்

13 ஆவது திருத்தச் சட்டம் என்ற விஷப் பாம்பைக் கொல்ல வேண்டும் என கூறியவர்கள் அப்பாம்புக்கு தெரியாமலே மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட வேட்புமனுக்களை பெற்று கொண்டனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 ஆவது திருத்தச் சட்டம் என்ற விஷப் பாம்பைக் கொல்ல வேண்டும் எனக் கூறி உருட்டுக்கட்டைகளை எடுத்தவர்கள், தமது தாக்குதலில் இருந்து பாம்பு தப்பி விட்டது போல் நடந்து கொள்கின்றனர்.

நாட்டு மக்களின் அரசியல் சிந்தனையை மாற்றுவதற்கும் அரசாங்கத்திற்கு எதிர்ப்புகள் வலுக்கும் போதும் அவற்றை அடக்குவதற்கு அரசாங்கம் பல நாடகங்களைக் கடந்த காலங்களில் அரங்கேற்றியது.

விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் அரங்கேற்றிய நகைச்சுவை நாடகங்களை மக்கள் இன்னமும் மறந்து விடவில்லை.

13ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிராக நகைச்சுவை நாடகங்களில் நடித்த நடிகர்களின் வசனங்களைத் தற்பொழுது கேட்க முடிவதில்லை. அந்த நாடகங்களின் இயக்குநர்களையும் காண முடிவதில்லை.

நாடகப் பிரதிகளையும் காண வில்லை. அத்துடன் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிராக நாடகம் போட்டவர்கள் சிலர் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட வாய்ப்புகளைப் பெற்று கொண்டு விட்டனர்.

13 ஆவது திருத்தச்சட்டம் என்ற பாம்பின் விஷப் பற்களை பிடுங் கப் போவதாக கூறிய வர்களின் பற்கள் பேச முடியாது கட்டி போயுள்ளன போலும் என்றார் அவர். (அ-2)


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண் மங்கல் என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?

**இதோ பாவியுங்கள்**

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

போலிகள் நடமாடுவதால் பொன்னாங்காணி தைலம் வாங்கும்போது வர்ண மூடியில் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு என்பன பொறிக்கப்பட்டுள்ளதா எனவும் பெட்டியில் ஒறிஜினல் என பொறிக்கப்பட்ட பளபளப்பான ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டுள்ளதா எனவும் பார்த்து வாங்குங்கள்.

Manufactured by:
**Sithara Products**
Puttalam Road, Chilaw
(Reg.No: 63 82)
AR/PR/No 228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2567

(கு/4332)


**அன்பு வாசகர்களே!**

நல்லூரான் உற்சவகால பாமாலைக்காக தங்களிடமிருந்து தரமான கவிதைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. தங்கள் கவிதைகளை நல்லூர் கந்தன் பாமாலை, ஆசிரியர், வலம்புரி, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். (ஆ-ர்)

# ஜோதிலிங்க இரதபவனி

வரலட்சுமி விரதம்
**காசி விஸ்வநாதர்-வடமராட்சி**
வல்வெட்டித்துறைச் சிவன் கோயில்
இளைஞர் நிகழ்வு
காலை 8.30-10.00
பெண்கள் வலுவூட்டல் நிகழ்வு
முற்பகல் 10.00-11.00
**ஸ்ரீ சோமநாதர்-வலிகாமம்**
காலை 7.00-பிற்பகல் 1.00
சித்தங்கேணிப் பிள்ளையார் கோயில்
இளைஞர் நிகழ்வு
காலை 8.30-10.00
பெண்கள் வலுவூட்டல் நிகழ்ச்சி
முறபகல் 10.00-11.00
மதவடி, சங்கானைப் பிள்ளையார் வழியே
பிற்பகல் 2.00-இரவு
பிரான்பற்று முருகமூர்த்தி கோவில்
**இராமேஸ்வரம்-கிளிநொச்சி/தென்மராட்சி**
காலை-இரவு
மிருசுவில் வடக்கு துர்க்கையம்மன் ஆலயம்
பெண்கள் வலுவூட்டல் நிகழ்வு
காலை 9.30-10.30
இளைஞர் நிகழ்வு
பிற்பகல் 3.30-5.00


**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து(V)<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா :36.75 செவ் 1<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில: A/L Business கனடா Citizen<br>தொ.இ:B361 | பிறப்பு: 1985 இந்து(V)<br>நட்சத்திரம்: திரவாதிரை 4<br>கி.பா :11 உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்: பட்டதாரி கணக்காளர் அவுஸ்திரேலியா CItizen<br>தொ.இ:G2258 |
| பிறப்பு: 1993 இந்து(இசைவேளாளர்)<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா 61.5 செவ் 8<br>தகைமை/தொழில்:O/Lதவில்<br>தொ.இ:B2241 | பிறப்பு: 1987 இந்து(V)<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>உயரம்: 5'1" சூ,செவ் 9<br>தகைமை/தொழில்: MBBS வைத்தியர்<br>தொ.இ:G2259 |
| பிறப்பு: 1978 இந்து(V)<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா : சூ,செவ் 4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L சாரதி<br>தொ.இ:B2243 | பிறப்பு: 1981 இந்து(V)<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா : செவ் 4 உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்:BSc, MSc Engineering Following Charted பொறியியலாளர்<br>தொ.இ:G2262 |
| பிறப்பு: 1977 இந்து(V)<br>நட்சத்திரம்:மிருகசீரிடம் 3<br>கி.பா :14.75 செ 2<br>தகைமை/தொழில்: O/L சொந்த கடை<br>தொ.இ:B2245 | பிறப்பு: 1984 இந்து(V)<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா :27 செவ் 7<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்:வைத்தியர்பிரான்ஸ் Citizen<br>தொ.இ:G2264 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி






**புதிய சுவை! புதிய அனுபவம்! புதிய தொழில்நுட்பம்!**

அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100% சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில் நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம். பெறுமதி மிக்க பரிசில்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன.

**ஷைலோ ஐஸ்கிறீம்**
No.231, Temple Road, Nallur, Jaffna.
T.P. 021 4926003

(3587)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சி பிரதேச சபையில் வழமைக்கு மாறாக அதிரடி இடமாற்றங்கள்

## பதில் நியமனங்கள் வழங்குவதிலும் இழுபறி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் பொறுப்புக் குரியவர்களின் வழமைக்கு மாறான இடமாற்றங்கள், நிர்வாக ஆளணிப் பற்றாக்குறை காரணமாக கரைச்சிப் பிரதேச சபையின் செயற்பாடுகள் முடக்கமடையும் நிலைக்கு தள்ளப் பட்டுள்ளதாக கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் நா.வை.குகராசா தெரிவித்துள்ளார். மேலும் தேவையான பணியாளர்களை வழங்குதற்கான பின்னிற்பை தமது நிர்வாகத்தை முடக்க நினைக்கும் திட்டமிட்ட நடவடிக்கையாகவே தாம் கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

கண்டாவளை, கரைச்சி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளை உள் ளடக்கியதாக பாரிய நிலப்பரப்பை கொண்டுள்ள குறித்த பிரதேச சபை யில் 91 பணியாளர்கள் பணியா ற்றி வந்த நிலையில் தற்போது 63 பணியாளர்கள்மட்டும்பணிக்கமர்த்துப் பட்டுள்ளனரென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் ஒரே தடவையில் அளவுக்கதிகமாக 7 பணியாளர்க ளின் இடமாற்றம், பொறுப்புக்குரிய வர்களின் இடமாற்றம், தற்காலிக இணைப்பு பகுதி, இணைப்பு பணி யாளர்களின் பணிநிலை உறுதி செய்யப்படாமை என்பவற்றால் தொடர்ந்தும் ஆளணிப் பற்றாக் குறை நீடித்துச் செல்வதாக சுட்டிக் காட்டியுள்ளார்.

இத்தகைய நிலையில் 4 வரு மானப் பரிசோதகர்கள் பணியாற்ற வேண்டிய தேவை இருக்கையில் தற்போது பணியாற்றி வரும் ஒரே யொரு வரிப் பரிசோதகரும் ஓய்வு பெறவுள்ளார்.

இவருக்கு மாற்றீடான ஒருவரை பணிக்கமர்த்துவதற்கு பலமுறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதற்கான எவ்வித நடவ டிக்கைகளும் மேற்கொள்ளப்பட வில்லை எனவும் அவரால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல செயல்நிலைகளுடன் தொடர் புபட்டவராக சேவையாற்றும் வரு மான வரிப்பரிசோதகரை உடன் நிய மிப்பது மிக அவசியமானதாகும்.

எனவே, இப்பதவியிடத்துக்கு உடனடியாக ஒருவரை நியமிக்க வேண்டிய தேவையுள்ளமை சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

மேற்படி விடயங்கள் தொடர்பில் வடமாகாண அமைச்சின் முதன் மைச் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், உள்ளூ ராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோ ருக்கும் வடமாகாண ஆளுநரின் செயலாளர், கிளிநொச்சி மாவட்ட செயலக உப அலுவலக கணக்கா ளர் ஆகியோருக்கும் பலமுறை கடிதம் மூலமும் தொலைபேசி மூலமும் அறிவித்தும் எவ்வித நட வடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் பிரதேச சபையினால் வினைத்திறனுட செயற்பட முடியாது எனவும் சுட்டி காட்டப்பட்டுள்ளது.

(அ-5)




## கபே அமைப்பின் நடமாடும் சேவை

(புளியம்பொக்கணை)

கபே அமைப்பின் அனுசர ணையுடன் கண்டாவளை பிரதேச சபைக்கு உட்பட்ட கிராம சேவை யாளர் பிரிவுகளுக்கு தேசிய அடை யாள அட்டை வழங்கும் நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை பரந் தன் பொதுநோக்கு மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

இதன்போது பிறப்புச் சான்றி தழ் அற்றவர்கள் தமது பிறப்பை உறுதிப்படுத்தக் கூடிய வேறு எந்த ஒரு ஆவணத்தையேனும் சமர்ப்பி த்து இச் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் இத்துடன் 60 வயதைப் பூர்த்தி செய்தவர்களும் இச் சேவை யினூடாக முதியோர் அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ-263)

## கிருஷ்ணன் ஆலய அலங்கார உற்சவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி மல்வில் கிருஷ்ணன் கோவில் அலங் கார உற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங் கள் நடைபெற்று வருகின்றன.

இவ் அலங்கார உற்சவத்தில் நாளை சனிக்கிழமை வேட்டைத் திருவிழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவி ழாவும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து 19 ஆம் திகதி திங் கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறு நாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.(அ-5)

## வவுனியாவில் வீதி விபத்துக்கள் அதிகரிப்பு




(பூந்தோட்டம்)

வவுனியாவில் தற்போது வீதி விபத்துக்கள் அதிகரித்து காணப் படுகின்றமை தொடர்பில் பொது மக்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

வாகன சாரதிகள் அசண்டை யீனமாக வேகமான முறையில் வாகனங்களை செலுத்துவதே இதற்கு காரணம் என தெரிவிக் கும் பொதுமக்கள், பொலிஸார் உரிய நடவடிக்கைகளைக் கைக் கொள்ள தவறுவதும் அதற்கு கார ணம் எனவும் சுட்டிக்காட்டுகின்ற னர்.

அண்மையில் வவுனியா புளி யங்குளம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் சு. கிருஸ்ண குமார் என்ற 4 பிள்ளைகளின் தந்தை மரணமடைந்த நிலை யில், இதே பகுதியில் இதற்கு முன் னரும் இருவேறு விபத்துக்களில் இருவர் மரணமடைந்திருந்த னர்.

இந் நிலையில் பொலிஸார், வேகமாக செல்லும் பேருந்துகள் மற்றும் உயர் ரக வாகனங்க ளின் சாரதிகள் மீது உரிய நட வடிக்கை எடுக்காமையே இதற்கு காரணம் என புளியங்குள மக்கள் சுட்டிக்காட்டினர்.

எனவே, இவ்வாறான விபத் துக்கள் இடம்பெறுவதை தடுப்பத ற்கு பொலிஸார் உரிய நடவடி க்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

(அ-250-266)

## ஜனாதிபதியின் வரவுக்காக திருத்தப்பட்ட செட்டிகுளம் வீதி

### மீண்டும் குன்றும் குழியுமாகியது

(பூந்தோட்டம்)

வவுனியாவில் இருந்து நெளுக் குளம் ஊடாக செட்டிகுளம் செல் லும் பிரதான வீதி திருத்தம் செய் யப்படாமையினால் பொதுமக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகி வரு கின்றனர்.

பல வருடங்களாக திருத்தம் செய்யப்படாத இவ் வீதியின் சிறு பகுதி மட்டும் கடந்த மாதம் இரா சேந்திரன்குளம் பகுதியில் அமைக் கப்பட்ட ஆடைத்தொழிற்சாலை யொன்றை ஆரம்பித்து வைப்பதற் காக ஜனாதிபதி வருகை தருவதாக தெரிவித்து திருத்தம் செய்யப்பட்ட போதிலும் முறையாக திருத்தம் செய்யப்படவில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அவ் வீதியில் காணப்பட்ட குழி களில் கிரவல் மண்ணையிட்டு அதன் மேல் தார் ஊற்றப்பட்டமை யால் தற்போது அவ் வீதி மீண்டும் குன்றும் குழியுமாக மாறி வருவதா கவும் மிகுதி வீதிகள் எவ்விதத் திலும் திருத்தம் செய்யப்படாமை யால் வாகன சாரதிகள் மற்றும் அவ் வீதியை பயன்படுத்துவோர் பெரும் பாதிப்பை எதிர்கொள்வதா கவும் தெரிவித்தனர்.

இராசேந்திரன்குளம், பாரதி புரம், விநாயகபுரம், பாவற்குளம், சூடுவெந்தபிலவு, வீரபுரம், உலுக் குளம் ஊடாக செட்டிகுளம் செல் லும் இவ் வீதியைத் தினமும் ஆயி ரத்திற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களும் பல பொதுமக்க ளும் பயன்படுத்தி வருகின்றனர்.

இந் நிலையில் மழை காலத் தில் இவ் வீதியில் மழை நீர் தேங்கி நிற்பதாகவும் இதன் காரணமாக பாடசாலை மாணவர்களின் சீரு டைகள் அசுத்தமாவதாகவும் தெரி விக்கும் இம் மக்கள் இது தொடர் பில் தாம் பல தடவை அதிகாரிக ளுக்கு தெரியப்படுத்தியதாகவும் கூறுகின்றனர்.

எனவே, இவ் வீதிக்கு பொறுப் பான வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் நீண்ட காலம் பயன் படுத்தக்கூடிய வகையில் இவ் வீதியை திருத்தி அமைத்து தர வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

(அ-250-266)







மன்னார் மடுமாதா திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா நேற்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப் ஆண்டகை தலைமையில் நடைபெற்றது. இதன்போது மடு அன்னையின் திருச்சுரூப பவனியாக வருவதையும் பக்தர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரம்பல நல்கிடும் வரலக்சுமி விரதம்




அம்பிகைக்குரிய விரதங்களில் இன்று அனுஷ்டிக்கப்படும் வரலக்சுமி விரதம் சிறப்பும் மகிமையும் மிக்கது. இந்தவிரதம் சுமங்கலிப் பெண்களுக்குரியது. ஆனால் திருமணமாகாத கன்னிப் பெண்கள் தமக்கு நல்லவரன் வந்து வாய்க்க வேண்டுமென்று பிரார்த்தித்து இவ்விரதத்தை நோற்கின்றனர். திருமணம் செய்த சுமங்கலிப் பெண்கள் தமது கணவர் நீண்ட நாள் வாழ வேண்டுமென்று அம்பிகையை வேண்டி இதனை அனுஷ்டிக்கின்றனர்.

இவ்விரதத்தை அனுஷ்டிப் போர் முதலில் இடத்தை நன்குகழுவிமெழுகி மாவிலை தோரணங்களால் அலங்கரித்து அதன் நடுவே ஒரு மேடையை அமைத்து அதில் நெல் அல்லது பச்சரிசியைப் பரப்பி தாமரைப் பூக்கோலம் இட வேண்டும்.

அதன் நடுவிலே கும்பம் வைத்தல் வேண்டும். இக் கும்பத்தில் தண்ணீருக்குப் பதிலாகப் பச்சரிசியைப் போட்டு நிரப்ப வேண்டும். முடியுடைய நல்ல தேங்காயைத் தேர்ந்தெடுத்து 5 அல்லது 7 மாவிலை இட்டு கும்பத்திலே அம்பிகையை ஆவாகித்து வணங்குதல் வேண்டும்.

அதன் பின்னர் நல்ல தூய வெள்ளை நூலிலே மஞ்சளைப் பூசி ஒன்பது இழைகளுள்ளதாக முறுக்கி எடுத்து ஒன்பது முடிச்சுக்கள் இட்டு அதனைக் கும்பத்தின் மேல் வைத்து அம்பிகையை வணங்கிக் கொண்டு விரதத்தை தொடங்கலாம்.

முதலில மஞ்சளிலோ சாணகத்திலோ பிள்ளையார் பிடித்து வைத்து அறுகம்புல்லையும் வைத்து விநாயகரை வணங்க வேண்டும். பின்னர் அம்பிகையை நினைத்தபடி அந்தநோன்புக்கயிறை எடுத்து வலது கையிலே கட்டிக் கொள்ள வேண்டும்.

பின்பு ஒன்பது முடிச்சுக்களுக்கும் கமலா, ரமா, லோக மாதா, விஸ்வஜனனீ, மகாலக்சுமி, க்ஷிராப்திதனயா, விஸ்வஸாக்ஷினி, சந்தரஸகோதரி, ஹரிவல்லபா என்ற ஒன்பது நாமங்களை உச்சரித்துவழிபாடியற்றவேண்டும். நெய்யுடன் கலந்த நெய்ச் சோற்றை அவிஸ் என்று படைத்து வணங்க வேண்டும். மதியம் ஒரு பொழுதுண்டு இரவு பால், பழம் அருந்தலாம். மன அமைதியோடும் இறை சிந்தனையுடனுமே இவ்விரதம் அனுஷ்டிக்கப்பட வேண்டும். இதனை விளையாட்டாக எண்ணக் கூடாது. ஆகவே இன்றைய இந்த வரலக்சுமிவிரதத்தைநல்லமுறையாக அனுஷ்டித்து வரம்பல நல்கிடும் வரலக்சுமி விரதத்தின் மகிமையை உணர்ந்து செயற்பட்டு நல்வாழ்வுக்கு அடிகோலுவோமாக.

**கலாபூஷணம்**
**இராசையா ஸ்ரீதரன்**

## பொதுநலவாய உச்சி மாநாட்டுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவோம்

### ஆபிரிக்க தூதுவர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நியமனக் கடிதங்களைக் கையளித்த வெளிநாடுகளின் பல தூதுவர்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டுக்கு தமது நாடுகள் பூரண ஒத்துழைப்புகளை வழங்கும் என தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டை மிகவும் ஆவலுடன் தாம் எதிர்பார்த்திருப்பதாகவும் இலங்கைக்கு ஆதரவு வழங்கும் வகையில் இந்த மாநாட்டில் தமது நாடு கலந்து கொள்ளும் எனவும் இலங்கைக்கான பொஸ்வானா நாட்டின் உயர்ஸ்தானிகர் லேசோகோ எதேல் மொத்சூம் தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த 5 உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர் ஒருவரும் கடந்த 12 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தமது நியமனக் கடிதங்களைக் கையளித்தனர்.

பொஸ்வானா, ருவாண்டா, பேனின், மொரீசியஸ் உட்பட 6 நாடுகளின் தூதுவர்கள் தமது நியமனக் கடிதங்களை இவ்வாறு கையளித்துள்ளனர். (அ-2)

## சதுரங்க திறந்த போட்டி

தடையற்ற சிப்பாய் சதுரங்க கழகத்தினால் நடத்தப்படும் கொழும்பு சர்வதேச சதுரங்க 6 ஆவது திறந்த போட்டி நாளை சனிக்கிழமை முதல் எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை வரை ஒன்பது சுற்றுக்களாக கொழும்பு 07, பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதன்படி 17 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தலா இரு சுற்றுக்களாகவும் 21 ஆம் திகதி ஒரு சுற்றுமாக இப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டியில் வடமாகாண சதுரங்க வீரர்களும் பங்கு பற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மஹிந்தவின் அராஜகம் தொடர்ந்தால் மக்கள் தண்டனை வழங்குவார்கள்

## எதிர்க்கட்சி தலைவர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

**வெலிவேரிய பிரதேசத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து படுகொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பில் ஜனாதிபதியே பொறுப்புக்கூற வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.**

இன்றைய சர்வாதிகார அரசாங்கத்திற்கு எதிராகவே எதிர்க்கட்சிகள் ஒன்றுதிரண்டிருக்கின்றன. மக்கள் சக்தி என்றால் என்னவென்பதை அரசாங்கம் இன்று உணர்ந்திருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வெலிவேரிய சம்பவத்தைக் கண்டித்து அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் ஆர்ப்பாட்ட பேரணியின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் கூறுகையில்,

நாட்டில் நடைபெறும் இராணுவ ஆட்சியை உடனடியாக அரசாங்கம் நிறுத்த வேண்டும். வெலிவேரிய சம்பவத்தில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள இராணுவத்துக்கு அதிகாரம் வழங்கியது யார்?

இதற்கு ஏன் அரசாங்கம் பதில் கூறாது மௌனம் காக்கின்றது.

சர்வ மதங்களும் சகல இனத்தவரும் ஒற்றுமையாக வாழும் இந்த நாட்டில் பிரிவினையை ஏற்படுத்திவிட்டு ஆட்சி நடத்த முடியும் என அரசாங்கம் நினைத்தால் அது முட்டாள்தனமாகும்.

இச்சம்பவம் தொடர்பில் தீர்வைக்காண முன்னர் கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் தாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அனைத்து மக்களையும் தாக்குவதனால் இறுதியில் மக்களே ஆட்சியை மாற்றியமைக்க நேரிடும்.

அரசாங்கம் தான் செய்யும் தவறுகளில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக தேர்தலையும் அபிவிருத்தி கண் துடைப்புக்களையும் செய்கின்றது. இவற்றைச் செய்வதன் மூலமாக மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியாது.

எனவே, இந்த குடும்ப அரசியலில் இருந்து நாட்டையும் மக்களையும் வெகுவிரைவில் ஐக்கிய தேசியக் கட்சி விடுவிக்கும்.

இதற்கு மேலும் மஹிந்த ராஜபக்ஷவின் அராஜகம் தொடருமானால் மக்கள் அதற்கு சரியானதொரு தண்டனையை பெற்றுக் கொடுப்பார்கள் என அவர் தெரிவித்தார். (அ-2)

## மடு திருப்பதியில் பாப்பரசரின் பிரதிநிதி பங்கேற்றார்

(கொழும்பு)

மருதமடுத் திருப்பதியின் வருடாந்ததிருவிழா நேற்றைய தினம் விமர்சையாக கொண்டாடப்பட்டது. பரிசுத்த பாப்பரசரின் அப்போஸ்தலிக்க பிரதிநிதி அதிமேதகு ஜோசப் ஸ்பிரற்றி ஆண்டகையின் தலைமையில் திருவிழா கூட்டுத் திருப்பலி நேற்றுக் காலை 6.30 மணிக்கு நிறைவேற்றப்பட்டது.

திருவிழா கூட்டுத் திருப்பலியில் வடக்கு, கிழக்கு, தெற்குப் பிரதேசங்களிலிருந்து ஆயர்கள் பங்கேற்றனர்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் புடைசூழ மடு அன்னையின் திருச்சொரூபவனி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)





பருத்தித்துறை சென்தோமஸ் சனசமூக நிலைய அன்னை வேளாங்கன்னி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் சிறுவர்களின் பாண்ட் வாத்திய சகிதம் அழைத்து வரப்படுவதையும் சிறுவர்களின் இடைவேளை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

(படங்கள்-தும்பளை செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு புதுமை லட்சுமி அம்மன் கோயில்



ஆன்மீகம் 88

பழனியில் பழனி, ஆண்டியை நலபாஷணத்தில் போகர் உருவாக்கிய தாகப் புராணங்கள் கூறுகின்றன. ஆதலால், முருகன் வேறு போகர் வேறல்ல என்று முன்பு ஆசான் கூறியதைக் கேட்டதும், ஒரு முறை அவரைப் பற்றி அறிந்துகொள்ள, என் குழப்பம் தீர அவரிடமே சாமி உண்மையிலே நீங்கள் யார்? என்று நான் கேட்ட போது என்னைப் போகர் என்பார்கள் கூறியது நினைவிற்கு வந்தது.

அந்த நினைவு தான் அப்போது என்னுள் எழுந்ததும், அந்தப் பாதத்தை என் குருநாதர் பாதமாக நினைத்துப்பூசித்தேன். அதில் என்னை மறந்தேன். காலம்எவ்வளவு கடந்தது என்பது எனக்குத் தெரியாது. யாரோ என் தோள்களைப் பிடித்து உலுக்க விழித்துப் பார்த்தேன் ஆசான் புன்முறவலில் தவழ்ந்து கொண்டிருந்தார். ராஜா என் கால்களை விடுகிறாயா? என்று அவர் கூற நான் திகைத்துப்போனேன். நான் அவர் பாதங்களை பூஜித்ததை அவர் தெரிந்து கொண்டு கூறியபோது, நான் பிறவிப் பயனடைந்ததை உணர்ந்தேன், மகிழ்ந்தேன். இந்தச் சுவாமி பாதத்தைப் பற்றிய ஒரு பாடல் உண்டு. அதனை இங்கு வந்து நெஞ்சுருகப் பாடினால் அநேக தெய்வீகக் காட்சிகளைக் கண்டு மகிழலாம். இது ஆன்ம சுத்தியுள்ளோர்களுக்கே இயலும்.

இந்தப்போகர் பாதத்திலிருந்து அரைக்கிலோமீட்டர் தொலைவில் தழருவள்ளுவ நாயனார் குகையுள்ளது. இது இருநூற்றிப்பத்து சித்தர்கள் மகாசபை கூடும் இடமாகும். இந்தக் குகைக்குமேலே அம்பாள் தவம் பண்ணும் இடமும், இதனருகே பிரம்மா, விஷ்னு, ருத்ர தீர்த்தங்களும் இருக்கின்றன. இங்குள்ள பாலாம்பிகை தீர்த்தத்தின் அருகில் சில கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. அதில் ஒன்றில் சீவனைக் கொடுத்து சிவகங்கை தீர்த்தம் ஆடு என்று எழுதப்பட்டிருக்கிறது.



ஸ்ரீல ஸ்ரீ தலையாட்டிசித்தருடன் காக புஜண்டர் நாடிரமணி குருஜி

அன்று ஒய்வுக்கு தூங்கியபோது ஆசானுடன் இருந்த நினைவுகள் அலைமோதியது. அன்று குரு அருகில் மௌனமாக அமர்ந்திருந்தேன். ஆடிக்கொண்டிருந்த அவர் தலை திடீர் என்று தன் ஆட்டத்தை நிறுத்தியது. என்ன ராஜா என்னாச்சு? வழக்கமாக இப்படி வந்து உட்கார்ந்தா ஏதாவது விளக்கங்கள் கேட்பே? ஆக இன்னிக்கு மௌனமாக இருக்கே என்று வினாவ, சாமி இந்த மாதிரி அடர்ந்த மலைக் காடுகளில் துஷ்டமிருகங்களும், கொடிய நச்சரவங்கள் உலாவும் என்ற அச்சமின்றி எங்களை உடன் அழைத்து வருகிறீர்கள்? எல்லா இடங்களைப் பற்றியும் விளக்கமாகச் சொல்கிறீர்கள். அது எப்படி தங்களால் முடிகிறது என்றேன்? சற்று நேரம் என்னையே பார்த்து புன்னகை பூத்தவர், ராஜா இங்கு பல இடங்களில் அந்த இடம் உனக்கு முன்பே அறிமுகமான பகுதியாகவும் பழக்கப்பட்ட இடமாகவும் தோன்றி புத்தி தடுமாறி இருக்கிறாய் என்பது உண்மையல்லவா? என்று கேட்டார். அது கேட்டு சவுக்கடி பட்டாற்போல் உணர்வையடைந்து பதில் சொல்ல இயலாமல் பிரமை பிடித்த நிலையில் ஆசானையே மௌனமாய் பார்த்துக் கொண்டிருந்தேன்.

தொடரும்

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# தமிழ் தனி ஈழ அரசு என்ற தீர்வுக்கு மாற்று...?

கூட்டாட்சி அரசியலமைப்பு

கூட்டாட்சி அரசியலமைப்பு என்றால், நடுவண் அரசு மற்றும் மாநில அரசு இரண்டிற்கும் இடையே தெளிவான அதிகாரப் பங்கீடு செய்யப்படுதல் வேண்டும். மாநிலங்கள் தங்கள் அதிகார வரம்பில் முழு இறைமை கொண்டு செயல்பட உரிமை பெற்றனவாக இருத்தல் வேண்டும். நடுவண் அரசு என்பதும் அனைத்து மாநிலங்களின் பொது நல்ன்களை பாதுகாத்து செயல்படும் ஒரு அரசாக இருக்கும்.



அந்த அரசும், அனைத்து மாநிலங்களின் நலன்களை பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில், அனைத்து மாநில பிரதிநிதிகளும் சம அளவில் பிரதிநிதித்துவம் பெறுவதை உறுதி செய்யும் வகையில், விதிமுறைகள் உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும். இவை கூட்டாட்சி அரசியலமைப்பின் அடிப்படை கூறுகள்.

பல இனங்கள் சேர்ந்து வாழும் கூட்டாட்சி முறை சிறப்பாக செயல்படும் நாடுகளுக்கு உதாரணங்களாக சுவிட்சர்லாந்து, பெல்ஜியம், கனடா முதலிய நாடுகள் இருக்கின்றன. சோவியத் நிகரமை கூட்டாட்சி நாட்டினை நிறுவிய சோவியத் பொதுவுடைமைக் கட்சியின் தலைவர் மாமேதை லெனின்கூட, சுவிட்சலாந்து நாட்டின் கூட்டாட்சி அரசமைப்புச் சட்டத்தினைத் தான் சோவியத் கூட்டாட்சி நாட்டிற்கு முன் உதாரணமாக எடுத்துக் கொண்டார். சுவிட்சலாந்து அரசியலமைப்புச் சட்டத்தில் மாநிலங்களின் தன்னாட்சி உரிமை பாதுக்காக்கப்பட்டுள்ளது. அம்மாநிலங்கள், தங்களுக்கான அதிகார வரம்பில் செயல்படுவதற்கு தனி அரசியலமைப்புச் சட்டத்தை வைத்துக்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள நடுவண் அரசின் அதிகாரங்கள் என்பன திட்டவட்டமாக வரையறுக்கப் பட்டுள்ளன. நடுவண் அரசின் சட்டம்இயற்றும் அதிகாரம் கூட மாநில அரசுகளின் அதிகாரத்தினால் கட்டுப்படுத்தப்படுகிறது. மாநிலங்கள், நடுவண் அரசு எடுக்கும் முடிவுகளில் பங்கு பெறுவதுடன் அந்த அரசின் சட்டம் இயற்றும் நடவடிக்கைகளிலும் தீர்மானகரமான பங்கினை ஆற்ற வழிவகை செய்யப்பட்டுள்ளது.அங்கு நடுவண் அரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் தவிர மற்ற அதிகாரங்கள் அனைத்தும் மாநிலங்களின் அதிகாரங்களாகும். அவற்றில் நடுவண் அரசு தலையிட முடியாது. இவ்வாறு மாநிலங்களின் அதிகாரங்கள் மீறப்பட முடியாதவையாக, மாநிலங்களின் இறைமை அதிகாரம் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறான அதிகாரப்பகிர்வின் மூலம், ஒவ்வொரு மாநிலத்தையும் சார்ந்த ஒவ்வொரு தேசிய இனத்து மக்களின் நிலம், பொருளியல், மொழி, பண்பாடு, நீதி நிர்வாகம் முதலியன சார்ந்த அவர்களின் முக்கியமான கூட்டுரிமைகள் பாதுகாக்கப் படுகின்றன. அனைத்து மாநிலங்களின் கூட்டு நலன்களை பாதுகாப்பதற்கு தேவையான அதிகாரங்கள் மட்டுமே நடுவண் அரசால்,அதுவும் மாநிலங்களின் கூட்டு நலன்களை பாதுகாப்பதற்கு தேவையான அதிகாரங்கள் மட்டுமே நடுவண் அரசால், அதுவும் மாநிலங்களின் ஒப்புதலுடன், செயல்ப் படுத்தப்படுகின்றன. இத்தகைய அரசமைப்பு மூலம் தான் இருநூற்றாண்டுகள் கடந்தும் ஐந்திற்கும் மேற்பட்ட தேசிய இனமக்கள் ஒரே அரசமைப்பு ஏற்பாட்டில் வாழ்கின்றனர்.

கனடா கூட்டாட்சி நாட்டில் உள்ள பிரெஞ்சு மொழியினரான குயுபெக் மாநிலத்தினர், அந்த நாட்டில் மற்ற மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதை காட்டிலும் கூடுதலான அதிகாரங்களை கொண்ட ஒரு மாநில அரசினை கொண்டுள்ளனர். அவர்களின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு மற்றும் மொழி உரிமைகள் அங்கு பாதுகாக்கப்படுவதற்கான நிலைமை கனடா நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆயினும், தங்களது குயுபெக் தேசத்தின் தனிநாட்டுரிமையை வலியுறுத்தும் குயுபெக் காட்சிகள் சில, குயுபெக் மாநிலம் அந்நாட்டிலிருந்து பிரிந்து செல்லும் உரிமையை வலியுறுத்துகின்றன. அவற்றின் கோரிக்கையை ஏற்ற கனடா அரசு, குயுபெக் மாநிலத்தில் வாக்கெடுப்பும் கூட நடத்தியது. அதில், அம்மாநிலம் பிரிந்து செல்வதற்கான கோரிக்கை சில ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோல்விக்குள்ளானது.

ஆயினும் கனடா அரசு , குயுபெக் மாநிலத்தினை அந்நாட்டிற்குள் உள்ள ஒரு தேசமென்று அறிவித்தது. அதன் மூலம், அந்நாடு குயுபெக் மாநிலத்தினரின் தனித்தன்மையையும் அவர்களின் உரிமைகளையும் மனப் பூர்வமாக அங்கீகரித்தது. இங்கு கவனிக்க வேண்டியது என்னவெனில், குயுபெக்மாநிலம் பிரிந்து செல்வதை குயுபெக் மாநிலத்தினரின் பெரும்பான்மையினர் ஆதரிக்கவில்லையெனினும், மேலும் கூடுதலான தன்னாட்சி உரிமைகளுடன் கனடா நாட்டிற்குள் ஒரு மாநிலமாக இருப்பதையே அந்த பெரும்பான்மையினரும் விரும்புகின்றனர் என்ற பெரும்பான்மையினரின் கருத்தினையும் குயுபெக் பிரிந்து செல்ல வேண்டும் என்று விரும்பும் மக்களின் கருத்தினையும் மதிப்பளிக்கும் கனடா நடுவண் அரசு, மேற்குறிப்பிட்டவாறு அவர்களது குய்யுபெக் மாநிலத்தை ஒரு தேசமாக அங்கீகரித்தது. தொடரும்

ஆய்வாளர் சு. அருணாச்சலம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# தூங்காத ஆறு



மாலைநேரம், மடத்தில் தன் அறையில் அமர்ந்திருந்தார் பரமார்த்தகுரு.

நரைத்ததாடி மீசையுடனும் பெருத்த வயிற்றுடனும் காட்சி தந்தார் அவர். சிந்தனையில் ஆழ்ந்திருந்த அவர் ஏதோ முடிவுக்கு வந்தார். "சீடர்களே!" என்று குரல் கொடுத்தார்.

ஐந்து சீடர்களும் அங்கு ஓடி வந்தார்கள். அவரின் திருவடிகளில் விழுந்து வணங்கினார்கள். கைகட்டி வாய் பொத்திப் பணிவாக நின்றார்கள். சீடர்களின் பணிவைக் கண்டு மகிழ்ந்தார் அவர். "என் அன்புச் சீடர்களே! ஒரு செய்தியைச் சொல்லவே உங்களை அழைத்தேன்" என்றார்.அவர்களில் மூத்தவனான மூடன் "உங்கள் கட்டளை எதுவானாலும் சொல்லுங்கள்.உடனே நிறைவேற்றி வைக்கிறோம்" என்றான்."சீடர்களே! குருவானவர் ஒரே இடத்தில் அதிக நாட்கள் தங்கக் கூடாது. நான் இங்கே பல நாட்கள் தங்கிவிட்டேன்.

உலகத்தில் உள்ள மக்களை எல்லாம் நல்வழிப்படுத்த வேண்டும். அதுவே என் குறிக்கோள். நாளை இங்கிருந்து புறப்பட எண்ணம் கொண்டுள்ளேன். பயணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள்" என்றார் அவர். "குருவே! உங்கள் பெருமையும் புகழும் உலகம் எல்லாம் பரவவேண்டும். சீடர்களாகிய எங்களுக்கு அதுதான் ஆசை. உங்கள் அருளுரையைக் கேட்டு இவ்வூர் மக்கள் நல்வாழ்வு வாழ்கிறார்கள்.' உங்களைக் கடவுளாக நினைத்து வழிபடுகிறார்கள். இதேபோன்று உலகமக்களும் நலம் பெறவேண்டும் என்ற உணர்ச்சி பொங்கச் சொன்னான் மட்டி.

"நாங்கள் என்ன தவம் செய்தோமோ? நீங்கள் எங்களுக்கு குருவாக வந்தீர்கள்" என்று புகழ்ந்தான் மடையன்."குருவே! உங்கள் அருட் பார்வை எங்கள் மீது பட்டது. எங்கள் பாவங்கள் அனைத்தும் நீங்கி விட்டன. இனி எங்களுக்குப் பிறவியே இல்லை" என்று அளந்தான் பேதை. "குருவே!உங்கள் கட்டளையை நிறைவேற்றுவதே எங்கள் கடமை. பயண ஏற்பாடுகளை உடனே செய்து முடிக்கிறோம். உங்களுடன் வரும் நற்பேறு கிடைத்ததே. அது போதும்" என்றான் மிலேச்சன்.

சீடர்களின் புகழ் மொழிகளால் தன்னை மறந்தார் அவர். "உங்களைப்போன்ற நல்ல சீடர்கள் யாருக்குக் கிடைப்பார்கள்? என்னைப் போலவே நீங்களும் புகழ் பெறப் போகிறீர்கள்" என்றார்.இதனால் உள்ளம் பூரித்த சீடர்கள் "குரு வாழ்க! குருவே துணை!" என்று அவரை வணங்கினார்கள்.பயண ஏற்பாடுகளைச் செய்ய அவர்கள் அங்கிருந்து சென்றார்கள்.

மறுநாள் பொழுது விடிந்தது. சீடர்கள் சூழ்ந்துவர ஆரவாரமாகப்

## பரமார்த்தகுரு கதைகள்

புறப்பட்டார் அவர். "பராமாத்ம குரு வாழ்க!பராமாத்ம குரு வாழ்க!" என்று அவர்கள் முழக்கம் செய்தார்கள்.

குருவிற்கு முன்னால் மூடனும் மட்டியும் சென்றார்கள். மடையனும் மிலேச்சனும் அவரைச் சூழ்ந்தபடி பின்னால் வந்தர்கள். பொருள்களைத் தலையில் சுமந்தபடி பேதையும் உடன் வந்தான். ஆங்காகே ஓய்வு எடுத் தபடி அவர் கள் பயணம் செய்தார்கள். வழியில் குறுக்காக ஆறு ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. அதில் சிறிதளவு நீரே இருந்தது.

அந்த ஆற்றைப் பார்த்தார் குரு. "சீடர்களே! நாம் அனைவரும் களைப்பு அடைந்து விட்டோம். இந்த ஆல மரத்தின் நிழலில் ஓய்வு எடுப்போம்" என்றார்.அந்த மரத்தின் நிழலில் போர்வையை விரித்தான் பேதை. அதில் அவர் அமர்ந்தார்.



சிறிது நேரம் சென்றது. அவரைப் பணிவாக வணங்கிய மிலேச்சன், "குருவே! நம் பயணத்திற்கு இந்த ஆறு தடையாக உள்ளது. இதைக் கடந்தால்தான் நாம் பக்கத்து ஊரை அடைய முடியும். முக்காலமும் அறிந்தவர் நீஙகள். இந்த ஆற்றைக் கடக்க வழி சொல்லவேண்டும்" என்று வேண்டினான்.

தொண்டையைக் கனைத்த அவர் "மிலேச்சனே! அறிவு கூர்மை நிறைந்த நீ நல்ல கேள்வி கேட்டாய். நன்கு ஆராய்ந்த பிறகே நாம் முடிவுக்கு வரவேண்டும். அதன் பிறகே ஆற்றைக் கடக்கவேண்டும். அவசரப்பட்டால் நம் உயிருக்கு ஆபத்து ஏற்படும். இந்த ஆறு தூங்குகிறதா? விழித்து இருக்கிறதா? அதை முதலில் அறியவேண்டும். அதன் பிறகே இதைக் கடப்பதைப் பற்றி முடிவு செய்யவேண்டும்" என்றார்.

இதைக் கேட்ட மடையன் பரபரப்புடன், "குருவே! நாங்கள் தனியே வந்திருந்தால் எங்களின் நிலை என்னவாகி இருக்கும்? ஆற்றின் இயல்பு தெரியாமல் இதில் இறங்கி இருப்போம். இது எங்களை விழுங்கி இருக்கும். நீங்களும் எங்களுடன் வரவே நாங்கள் பிழைத்தோம்" என்றான்.குறுக்கிட்ட பேதை "குருவே! ஆறு விழித்து இருக்கிறதா? உறங்குகிறதா? எப்படி அறிவது? நீங்கள்தான் விளக்கமாகச் சொல்லவேண்டும்" என்றான்.

"சீடர்களே! ஆறு நம்மைப் போன்றதுதான். பகலில் விழித்து இருக்கும். இரவில் தூங்கும். உரத்த ஓசை கேட்டால் அதன் தூக்கம் கலைந்துவிடும். மெல்லிய குரல் கேட்டாலும் சில ஆறுகள் வழித்துக் கொள்ளும்.இப்பொழுது மாலை நேரம். இந்த ஆறு தூங்க இன்னும் நேரம் உள்ளது. அதுவரை நாம் பொறுமையாக இருக்க வேண்டும். இரவு உணவை இங்கேயே சமைத்து விடுங்கள். நாம் எல்லோரும் உண்போம். பிறகு ஆற்றைக் கடக்கலாம்" என்றார் அவர்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால் உற்பத்தி பொருட்கள் சர்ச்சை; அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிப்பு

## சுகாதார அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

(கொழும்பு)

**பால்மா மற்றும் பால் உற்பத்திப் பொருட்கள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினை குறித்து அமைச்சரவை கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்காலத்தில் இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து ஆராய அமைச்சரவை உபகுழுவொன்றை நியமிப்பது தொடர்பில் அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பிக்கவுள்ளது.

பல் தேசிய கம்பனிகளின் அழுத்தங்களுக்கு நாம் ஒருபோதும் அடிபணியப் போவதில்லை. மக்களுக்கு சுத்தமானதும் உயர்தரமும் வாய்ந்த உணவுகள் கிடைக்கத் தேவையான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும்.

டி.சி.டி. அடங்கியுள்ள பால்மாக்கள் மற்றும் வேபுரோட்டின் அடங்கிய பால்உற்பத்திப் பொருட்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், இந்தப் பிரச்சினை தொடர்பில் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

அவற்றின் அறிக்கைப் படி தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. எமது நிலைப்பாட்டை கம்பனிகளுக்கு அறிவித்துள்ளோம்.

மக்களுக்கு தட்டுப்பாடின்றி பால்மா கிடைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அமைச்சரவைக்கு விளக்கிக்கூறப்படும். மக்களுக்கு சுத்தமான உணவு வழங்குவது எமது பொறுப்பாகும்.

பால்மா மட்டுமன்றி ஏனைய உணவுப் பொருட்கள் தொடர்பிலும் சுகாதார சேவைப் பணிப்பாளருக்கே அதிக அதிகாரம் உள்ளது. உணவு தொடர்பில் விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. உணவு தொடர்பில் ஏதேனும் முறைப்பாடுகள் கிடைக்குமாயின் குறித்த குழுவினூடாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

வேபுரோட்டின் தொடர்பில் நியூஸிலாந்து அரசாங்கமே முதலில் அறிவித்தது. இதன் பின்னரே சில நாடுகள் நியூஸிலாந்து பாலுணவுப் பொருட்களை தடைசெய்தன. நாமும் அந்த முடிவையே எடுத்தோம்.

சம்பந்தப்பட்ட கம்பனிகளுக்கும் அது குறித்து அறிவித்துள்ளோம். மக்களுக்கு நஞ்சு கலக்காத பால்மா வழங்கத் தேவையான சகல நடவடிக்கைகளையும் சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளது.

மக்களுக்கு பாதிப்பான உணவு வகைகள் சந்தையில் விற்பனையாவதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். அது தொடர்பில் முழுமையான சட்டம் அமுல்படுத்தப்படும். பல் தேசிய கம்பனிகளின் அழுத்தங்களுக்கு ஒருபோதும் நாம் அடிபணிய மாட்டோம் என்றும் கூறினார். (அ-2)







இந்தியாவின் 67 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்றுக்காலை யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் இடம் பெற்றது. இதில் யாழ். இந்தியத் துணைத்தூதுவர் வெ.மகாலிங்கம் தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ். ஆர்.கரன்)

## மகாபாரதம் தெய்வீக பேருரை

(வேலணை)

வேலணை பெருங்குளம் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

இதன்போது தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா சிறந்த பக்கவாத்தியங்கள் சகிதம் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையை நிகழ்த்தி வருகிறார் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-2)

## சிறுவயது திருமணங்கள் நாட்டில் அதிகரித்துள்ளன

(கொழும்பு)

இலங்கையில் சிறுவர் திருமணங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் மற்றும் கல்விக்கான நிதியம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதிய தெளிவின்மை, பொருளாதார நிலைமைகள் போன்றவற்றால் இவ்வாறு சிறுவர் திருமணங்கள் அதிகரித்த நிலையில் காணப்படுவதாக அதன் இலங்கைக்கான பிரதிநிதி ரீசா ஹொசைனி தெரிவித்துள்ளார்.

சிறுவயதில் திருமணம் முடித்த 71 பேர் மத்தியில் நடத்தப்பட்ட ஆய்வு மூலம் அவர்களில் 30 சதவீதமானவர்கள் 18 வயதுக்கு முன்னதாகவே கருத்தரித்திருந்தமை தெரியவந்துள்ளது.

இவ்வாறான சிறுவர் திருமணங்களால், மனஉளைச்சல், சுகாதார சீர்கேடுகள், சிசு மரணங்கள் போன்றன அதிகரிப்பதுடன், அவர்களுக்கு எதிரான பாலியல் மற்றும் ஏனைய வன்முறைகளும் அதிகரிக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் இது குறித்து நாட்டுமக்களுக்கு போதிய தெளிவு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

## வெலிவேரிய சம்பவ அறிக்கை அடுத்த வாரத்தில் சமர்ப்பிப்பு

வெலிவேரிய சம்பவம் குறித்த அறிக்கை அடுத்த வாரத்தில் வெளியிடப்படவுள்ளது.

சுற்றாடல் அமைச்சிடம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கட்டட ஆய்வு மற்றும் சுரங்க ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னதாக இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளர் பேர்னாட் பிரேமி குறிப்பிட்டுள்ளார்.

ரத்துபஸ்பல சம்பவம் தொடர்பில் வேறு தரப்பினரும் விசாரணைகளை நடத்தி வருகின்றனரென அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரதேச மக்களுக்கு குழாய் நீர் விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது. (அ-2)

## ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்துபவருடன் நீதவானும் செல்ல வேண்டியது அவசியம்

### முன்னாள் இராணுவத்தளபதி

(கொழும்பு)

ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்த இராணுவம் அனுப்பப்படும் போது, அவர்களுடன் நீதவான் ஒருவரும் செல்ல வேண்டும் என்று முப்படைத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அனைத்து சட்ட விதிகளையும் பொலிஸாரே அமுலாக்க வேண்டும். எனினும் அவர்களால் கட்டுப்படுத்த முடியாத நிலையிலேயே இராணுவம் வரவழைக்கப்படும். ஆனால், இராணுவத்துடன் நீதவான் ஒருவரும் செல்ல வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இதன்படி வெலிவேரிய தாக்குதல் சம்பவத்தின் போது இராணுவத்தினருடன் நீதவான் ஒருவர் அனுப்பி வைக்கப்படாத காரணம் யாது? என்று செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர்.

இந்தக்கேள்விக்கு தற்போது பதில் வழங்க முடியாது என்றும், சம்பவம் தொடர்பில் விசாரணை நடைபெற்று அறிக்கை வெளியானதன் பின்னரே பதில் கூற முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இந்த மாதம் இலங்கைக்கு தலைவலியான மாதமாக அமையும்என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் இலங்கை வருகையின் நிமித்தமே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் இலங்கை இராணுவத்தினர் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பதில் வழங்க இராணுவம் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நவநீதம்பிள்ளை விரும்பும் இடங்களுக்கு அழைத்துச் செல்லவும், அவருக்கான பாதுகாப்பை வழங்கவும் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வம்சாவளி மக்களுக்கு உதவ இந்தியா பின்னடிப்பு

## அமைச்சர் பசில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்களுக்கு உதவுவதில் இந்தியா பின்னிற்கின்றது. இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியைக் கொலை செய்ததுடன் இந்திய அமைதிப் படையினர் மீது தாக்குதல் நடத்தியவர்கள் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகளே. தாக்குதல் நடத்திய பகுதி மக்களுக்கே இந்தியா அதிக உதவிகளை செய்வதற்கு முனைகின்றது என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

இந்திய ஊடகவியலாளர் குழுவொன்று .இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது. இந்தக் குழுவினர் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஜனநாயக மக்கள் காங்கிரசின் தலைவருமான பிரபா கணேசனின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் முற்பகல் அமைச்சர் பசில் ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்த பேச்சுவார்த்தையின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

இந்தியாவுடன் சிறுசிறு பிரச்சினைகள் இருந்த போதிலும் இந்திய அரசாங்கத்துடன் இணைந்து எமது அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. கிளிநொச்சி வரையான ரயில் பாதை அமைக்கும் பணி பூர்த்தி செய்யப்படவுள்ளது. செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி புதிய புகையிரதப் பாதையில் சேவைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களுக்கு இந்திய அரசாங்கம் உதவுவதில் பின்னடிப்பு செய்கின்றது., பல தடவைகள் இதுகுறித்து எடுத்துக் கூறியுள்ளபோதிலும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இந்த விடயத்தில் இந்திய அரசாங்கம் அக்கறைகாட்டுவதாக இல்லை.

50 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கு இந்தியா உதவி செய்துள்ளது. இதில் 45 ஆயிரம் வீடுகள் வடக்கு, கிழக்கு பகுதிகளிலேயே அமைக்கப்பட வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக இருந்தது. மலையகப் பகுதிக்கு 4 ஆயிரம் வீடுகளை அவர்கள் விட்டுக் கொடுப்பதற்கு நாம் பெரும்பாடுபட வேண்டியிருந்தது. 45 ஆயிரம் வீடுகளை அமைக்கும் பணியை உடனடியாக வடகிழக்கில் ஆரம்பிக்குமாறு இந்தியத் தூதுவர் எம்மிடம் வலியுறுத்தினார். ஆனால் மலையகத்தில் 4 ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட வேண்டுமென நாம் கோரியபோது ஆலோசனைகள் இன்னமும் கிடைக்கவில்லை என்றும் வேறு பல சாட்டுக்களும் கூறப்பட்டன.

இந்திய வம்சாவளி மக்கள் போராட்டங்களை நடத்தவில்லை. ஆயுதங்களைத்தூக்கவில்லை. ஆயினும் இந்த மக்களுக்கு உதவுவதில் இந்தியா பின்னடிப்புச் செய்கின்றது.



இந்தியாவின் உதவியுடன் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நாம் மேற்கொண்டு வருகின்றோம். வவுனியாவில் இந்திய வம்சாவளி மக்களை பதிவு செய்ய நாம் முற்பட்டபோது இந்திய வம்சாவளி மக்கள் என பதவிசெய்ய வேண்டாமெனவும் இலங்கைத் தமிழர்கள் என பதிவு செய்யுமாறும் ஒரு குழு அச்சுறுத்தியுள்ளது. இருந்தபோதிலும் எத்தகைய பாதிப்புமின்றி நாம் செயற்படுகிறோம்.

இந்தியா பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு எமக்கு உதவுகின்றது. கிளிநொச்சி வரையான புகையிரதப் பாதையை அது அமைத்துள்ளது.

அடுத்தமாதம் 15 ஆம் திகதி இந்த புதிய புகையிரதப் பாதை திறக்கப்படும். அதேபோல் காங்கேசன் துறை வரையான புகையிரதப் பாதையும் அமைக்கப்பட்டு வருகிறது.

சம்பூர் அனல் மின் நிலையமும் இந்தியாவுடன் இணைந்தே அமைக்கப்படும். பலாலியில் விமான ஓடுபாதையும் இந்தியாவின் உதவியுடன் அமைக்கப்படும் என்றார். (அ-2)

## சந்நிதி முருகன் ஆலய பக்தர்களுக்காக கடல் நீரேரியில் மண்பாதை அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்களின் நன்மை கருதி தொண்டைமானாறு கடல்நீரேரிக்கு குறுக்காக மண் பாதை அமைக்கப்பட்டுள்ளது.

பலபேரின் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் பக்தர்களின் நன்மை கருதி, தொண்டைமானாறு கடல் நீரேரிக்கு குறுக்காக அமைக்கப்பட்ட இப்பாலம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆலய பிரதம குருக்களினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இக் கடல் நீரேரிக்கு குறுக்காக மண்பாதை அமைப்பதற்கு அரச அதிகாரிகள் தடையாக இருந்து வந்ததாகவும் இதனை அமைக்காது விட்டால் செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு அச்சுவேலி–தொண்டைமானாறு வீதியூடாக வருகை தரும் மக்கள் ஆலயத்தை தரிசிப்பதற்கு ஆற்றிலிருந்து 2 கிலோமீற்றர் தூரம் சுற்றி வர வேண்டியிருக்கும் எனவும் கோப்பாய்பிரதேசசபைத்தவிசாளர்சேரமேஸ், வல்வெட்டித் துறை நகர சபை பிதா என். ஆனந்தராஜ் ஆகியோர் ஊடகவியலாளருடனான சந்திப்பில் கடந்த 9 ஆம் திகதி கூறியிருந்தனர்.

இப்பாலம் அமைப்பதை தடுத்தால் பொதுமக்களை திரட்டி ஆர்ப்பாட்டம் செய்வோம் எனவும் எச்சரித்திருந்தனர்.

இந்நிலையிலேயே மேற்படி பாலம் ஊர்மக்களினாலும் பிரதேச சபையினராலும் வெற்றிகரமாக அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டுள்ளது. (அ-4)

## சிவில் சமூகத்தின் நடவடிக்கையில் இராணுவம் தலையிடக் கூடாது

### கரவெட்டி பிரதேச சபையில் தீர்மானம்

(கரணவாய்)

சிவில் சமூகத்தின் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் தலையிடக் கூடாது என்னும் பிரேரணை கரவெட்டி பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்டது.

கரவெட்டி பிரதேச சபையின் மாதாந்த கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்ற போது ஆளும் கட்சி உறுப்பினர் அ.மதியரசனால் கொண்டு வரப்பட்ட மேற்படி பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இப்பிரேரணையை சபையில் முன்வைத்தபோது எதிர்க்கட்சி உறுப்பினர்களால் கூச்சலும் குழப்பமும் ஏற்படுத்தப்பட்டது.

இதனால் சபை நடவடிக்கையிலிருந்து இரு தடவைகள் தவிசாளரும் செயலாளரும் வெளிநடப்பு செய்திருந்தனர்.

மூன்றாவது தடவையாக சபை கூடியே மேற்படி தீர்மானம் நிறைவேறியது.

இருந்தும் தொடர்ந்து கூச்சல் குழப்பங்கள் மத்தியிலேதான் இக் கூட்டம் முடிவுற்றது. (அ-60)

## பரஞ்சோதி வித்தியில் நடைபெற்ற ஆளுமை விருத்தி அரங்கப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய மாணவர்களுக்கான ஆளுமை விருத்திக்கான மூன்று நாள் அரங்கப்பட்டறை நிகழ்வு சுதந்திர அரங்கச் செயலாளிகளின் ஒத்துழைப்புடன் நடைபெற்றுள்ளது.

பாடசாலையின் அதிபர் திருமதி கடம்பமலர் தலைமையில் கடந்த 8, 9, 10 ஆம் திகதிகளில் இடம்பெற்ற இவ் அரங்கப்பட்டறையின் ஆரம்ப நிகழ்வில் பங்குகொண்டு உரையாற்றிய யாழ். வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா ஒவ்வொரு பிள்ளையும் தன்னை உணர வேண்டும் தான்தான் அழகானவர், கெட்டிக்காரர் என்று நம்ப வேண்டும். தனது குடும்பம் மேலானது ,தன் ஊர்தான் மேலானது என நம்ப வேண்டும். எம்மாலும் சாதிக்க முடியும் என்று திடசங்கற்பம் கொள்ள வேண்டும் என்ற கருத்துக்களை முன்வைத்திருந்தார்.

இவ் அரங்கப்பட்டறையில் வளவாளர்களான கிளிநொச்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.விந்தன், யாழ். இந்துக் கல்லூரியின் வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர் நாகு. மகிழச்சிகரன், கிளி/பளை மத்திய கல்லூரியின் நாடகமும் அரங்கியலும் ஆசிரியர் திருமதி செ.இ. வைதேகி, கிளி/முழங்காவில் மகா வித்தியாலய நாடகமும் அரங்கியலும் ஆசிரியர் ச.விஜோஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-5)




★1513 - கினெகேட் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் லண்டனின் எட்டாம் ஹென்றி மன்னன் பிரெஞ்சுபடைகளை வென்றான்.

★1780 - தென் கரோலினாவில் காம்டன் என்ற இடத்தில் பிரித்தானியப் படைகள் அமெரிக்கப் படைகளை வென்றனர்.

★1819 -லண்டன் மான்செஸ்டரில் அரசுக்கெதிராகக் கிளர்ந்த கிளர்ச்சியாளர்கள் அடக்கப்பட்டதில் 11 பேர் உயிரிழந்ததுடன் 400 பேர் வரை காயமடைந்தனர்.

★1865 - 4 ஆண்டுகள் ஸ்பானியரின் பிடியில் இருந்த டொமினிக்கன் குடியரசு மீண்டும் விடுதலை பெற்றது.

★1868 - பெருவில் அரிக்கா (இன்றைய சிலியில்) இடம்பெற்ற 8.5 ரிக்டர் அளவு நிலநடுக்கம் மற்றும் ஆழிப்பேரலை காரணமாக 25ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

★1945 - ஜப்பானியப் பிரதமர் கண்டாரோ சுசுக்கி மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

★1945 - சீனாவின் கடைசி மன்னன் பூயி சோவியத் படைகளினால் கைது செய்யப்பட்டான்.

★1964 - தென் வியட்நாமில் அமெரிக்காவின் ஆதரவுடன் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் ஜனாதிபதி டோங் வான் மின் பதவியிழந்தார்.

பிறப்புக்கள்

★1821 - ஆர்தர் கெய்லி, கணிதவியலாளர் (இ. 1895)

★1872 - அ. மாதவையா, தமிழ் முன்னோடி எழுத்தாளர் (இ. 1925)

★1933 - தா. இராமலிங்கம், ஈழத்துக் கவிஞர் (இ. 2008)

இறப்புகள்

★1705 - ஜேக்கப் பெர்னூலி, சுவிட்சர்லாந்து கணிதவியலாளர், அறிவியலாளர் (பி. 1654)

★1886 - ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர், (பி. 1836)

★1971 - இ. மு. வி. நாகநாதன், இலங்கைத் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் (பி. 1906)

★2003 - இடி அமீன், உகண்டா சர்வாதிகாரி (பி. 1924)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் உதவியுடன் இந்திய வர்த்தகத்தை விரிவாக்குதல்; இலங்கையின் கனவுத் திட்டம்

கொழும்பின் புதிய துறைமுகம் விரிவுபடுத்தப்படுவதானது, மிகப்பெரிய திட்டம் என இதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட பிரியத் பண்டு விக்ரம கூறுகிறார். இத்திட்டம் மிகவும் முக்கியமானதெனவும் அவர் தெரிவித்துள்ளார். புதிய துறைமுக அபிவிருத்திக்காக நிலம் ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி கொழும்பு துறைமுகத்திற்குப் புதிதாக மூன்று முனையங்கள் கட்டப்படவுள்ளதுடன், இவை ஒவ்வொன்றிலும் கப்பல் தரிப்பிடம் அமைக்கப்படவுள்ளதாகவும் விக்கிரம தெரிவித்துள்ளார்.

இப்புதிய துறைமுக விரிவாக்கத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தை அபிவிருத்தி செய்வதற்காக 400 மில்லியன் டொலர்கள் முதலிடப்பட்டுள்ளன். இதேபோன்று கப்பல் தரிப்பிடங்களைக் கட்டுவதற்கு 500 மில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. கப்பல் தரிப்பிடங்களைக் கட்டுவதற்காக ஒதுக்கப்படும் நிதியில் 85 சதவீதமானவை China Merchant Holdings நிறுவனத்தாலும் மீது நிதியானது இலங்கை துறைமுக அதிகார சபையாலும் வழங்கப்பட்டுள்ளது.

2020 அளவில் இத்துறைமுகத்தின் ஊடாக ஒரு பில்லியன் வரையான வருமானத்தைப்பெறுவதே தமது நோக்கமாகும் என இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் விக்கிரம குறிப்பிட்டுள்ளார்.

கொழும்புத் துறைமுகத்தில் 10,000 வரையான கொள்கலன்களைக் காவிவரும் மிகப்பெரிய கப்பல்களை இங்கு நிறுத்துவதே இலங்கையின் இலக்காக உள்ளது.

தற்போது இவ்வாறான மிகப்பெரிய 183 கப்பல்கள் கிழக்கு ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையில் பயணிப்பதாக இலங்கை துறைமுக அதிகார சபையின் முகாமையாளர் உப்புல் ஜெயதிச குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான மிகப்பெரிய கப்பல்களைத் தற்போது இந்திய மாகடலில் உள்ள மூன்று துறைமுகங்களில் மட்டுமே நிறுத்தக் கூடியதாக உள்ளது. அதாவது ஓமானின் Salalah துறைமுகம், சிங்கப்பூர் மற்றும் துபாயிலுள்ள துறைமுகங்களே அவையாகும்.

இந்தியாவுடன் மிகப்பெரிய வர்த்தக வழங்குநராக இலங்கை செயற்படுவதற்கு இப்புதிய கொழும்புத்துறைமுகம் பயன்படுத்தப்படும் என இலங்கைத் துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவின் கிழக்குக் கரையோரமே இலங்கையின் மீன்பிடி வளப் பிரதேசமாக காணப்படுகிறது. என ஜெயிச குறிப்பிட்டுள்ளார். இதேபோன்று இந்தியாவின் மேற்குக் கரையோரத்தில் தரித்து நிற்கும் மிகப்பெரிய வர்த்தகக் கப்பல்கள் துபாய் அல்லது ஓமான் துறைமுகங்களின் ஊடாகவே பயணிப்பதாகவும் கொழும்புத் துறைமுகம் விரிவாக்கப்படும் போது இந்தியக் கப்பல்கள் இத்துறைமுகத்தைப் பயன்படுத்த முடியுமெனவும் விக்கிரம சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தியாவின் 20 சதவீதமான கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தைப் பயன்படுத்த வேண்டுமென்பதே எமது நோக்காகும். தற்போது இந்தியாவின் 16 சதவீதமான கப்பல்கள் இத்துறைமுகத்தைப் பயன்படுத்துகின்றன எனவும் விக்கிரம தெரிவித்துள்ளார்.

இலங்கையானது இத்துறைமுக அபிவிருத்திக்கான பெரும்பாலான நிதியை சீனாவிடமிருந்து பெற்றுக் கொள்கின்றது என்பது சிறிது வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன்மூலம் சீனா இந்துமாகடலில் தனது அதிகாரத்தைச் செலுத்துவதற்கான ஒரு வாய்ப்பைப் பெற்றுக் கொள்கிறது.

2009 இல் போர்முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர், இலங்கையில் பெருமளவான முதலீடுகளை மேற்கொள்ளும் நாடுகளில் சீனா முதலிடம் வகிக்கிறது. புதிய துறைமுகம், விடுதிகள் மற்றும் துறைமுக விரிவாக்கம் போன்றவற்றுக்கு நிதி வழங்கியுள்ளது.



சீனாவுடன் இலங்கையின் ராஜபக்ச அரசாங்கம் கொண்டுள்ள இத்தகைய உறவான்து இந்தியாவுடனான மூலோபாய சார் உறவைக் குழிதோண்டிப் புதைப்பதாக விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கை சீனாவிடமிருந்து கடன் களைப் பெற்று வருகிறது. இதனால் தனியார் முதலீடுகளுக்கான வாய்ப்புக் குறைவாக உள்ளதாக உலக வங்கி மற்றும் அனைத்துலக நாணய நிதியத்தைச் சேரந்த அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சீனாவிடமிருந்து பெறும் கடனுக்கான வட்டி, ஐரோப்பிய முதலாளித்துவ சந்தைகளில் இலங்கை பெறும் கடன் வட்டியைவிடக் குறைவாகும் என பொருளியல் நிறுவகமான பருத்தித்துறை அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவரான முத்துக்கிருஸ்ணா சர்வானந்தன் தெரிவித்துள்ளார்.

சீனா நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி மற்றும் கொழும்பு கட்டுநாயக்கா அதிவேகப் பாதை போன்ற திட்டங்களுக்கும் முதலீடு செய்துள்ளது என முத்துக் கிருஸ்ணா சர்வானந்தன் மேலும்தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தென்பகுதியில் துறைமுகம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு சீனா நிதி வழங்கியுள்ளதானது, தனது இராணுவ நலன்களை அடைந்து கொள்வதற்காக இத்துறைமுகத்தைப் பயன்படுத்தவே என பலரும் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்திய மாக்கடலில் சீனா தனது கடற்படையின் செல்வாக்கை அதிகரிப்பதற்கு இலங்கையின் தெற்கில் அமைந்துள்ள துறைமுகத்தைப் பயன்படுத்த முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்திய மாக்கடலில் சீனாவின் இராணுவம் நிலைகொள்வது தொடர்பில் இந்தியா அதிகம் கவலை கொள்ளவில்லை என முன்னாள் இந்தியப் புலனாய்வு அதிகாரியும் பாதுகாப்பு வல்லுனருமான றமணி ஹரிகரன் தெரிவித்துள்ளார்.

ஆனால், இது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சீனா, இலங்கையுடன் மிகப் பலமான கடல்சார் வர்த்தகத்தைக் கட்டியெழுப்ப விரும்புகிறது. இதன்மூலம் இது எதிர்காலத்தில் தனது கடல்சார் நடவடிக்கைகளை முன்னேற்றிக்கொள்ள முடியும்.

சீனக் கப்பல்களின் பாதுகாப்பு, கப்பல்களைத் திருத்துதல், நங்கூரமிடுதல் போன்ற பல் வேறு பாதுகாப்பு சார் நடவடிக்கைகளை சீனா விரிவுபடுத்திக்கொள்ள முடியும் என ஹரிகரன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் துறைமுக கட்டுமானத்திற்காக சீனாவானது முதலீடு செய்வதன் மூலம் இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் சீனா மிக இலகுவாக தனது நிலை கொள்வதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

இந்திய மாக்கடல் தொடர்பான ஆய்வுகள், அணுகுமுறைகள் போன்ற பல்வேறு எதிர்கால கடல்சார் நடவடிக்கைகளுக்குத் தேவையான தகவல்களை சீனா பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பையும் இது வழங்குகிறது என ஹரிகரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறான குற்றச்சாட்டுக்களை விக்கிரம மறுத்துள்ளார். சீனாவானது அம்பாந்தோட்டையில் ஒருபோதும் கடற்படைத் தளம் ஒன்றை அமைக்காது என்பதற்கு தான் உத்தரவாதம் அளிப்பதாகவும் விக்கிரம உறுதியளித்துள்ளார்.

சீனாவானது வர்த்தக சார் நலனை மட்டும் கருத் திற்கொண்டே அம்பாந் தோட்டையில் துறைமுகத்தை அமைப்பதாகவும் இதில் இராணுவ நோக்கம் எதுவும் இல்லை எனவும் விக்கிரம உறுதி தெரிவித்துள்ளார்.

இவ்வாறன துறைமுகங்களை எவரும் அவர்களது மூலோபாய முக்கியத்துவம் மிக்க இராணுவ சேவைகளை மேற்கொள்வதற்குப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொள்வார்கள் என தான் நினைக்கவில்லை எனவும் விக்கிரம தெரிவித்துள்ளார்.

இந்திய கப்பல்கள், கொழும்புத் துறைமுகத்தைப் பயன்படுத்திப் பயணிக்க வேண்டுமாயின் விக்கிரமவும் இலங்கை அரசாங்கமும் தாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

புதினப்பலகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

# 17.08.2013-16.09.2013



## மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்

**எந்தக் காரியத்தையும் நினைத்த உடன் முடிக்க வேண்டுமென்று நினைக்கும் மேட இராசி நேயர்களே! சந்தித்தவர்களால் சந்தோஷம் கிடைக்கும்!**

## சந்தித்தவர்களால் சந்தோஷம் கிடைக்கும்

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கம் மகிழ்ச்சி அளிக்கும் விதத்திலேயே இருக்கிறது. மங்கலகாரகன் செவ்வாய் மாற்றங்களைக் கொடுக்கும் குருவுடன் இணைந்து, குருமங்கள யோகம் வழங்கும் விதத்தில் சஞ்சரிக்கிறார். சந்திரனின் நேர் பார்வையில் இராசிநாதன் அமர்ந்து, மாதம் தொடங்குவதால் சந்திரமங்கள யோகமும் செயற்படும் வாய்ப்பு உண்டு.

சூரியனுடன் புதன் இணைந்து புத- ஆதித்ய யோகமும் செயற்படப் போகிறது. எத்தனை விதமான யோகங்கள் இருந்தாலும் சனியின் சப்தம பார்வை உங்கள் இராசியில் பதிவதால் மனநிம்மதி குறையும். மருத்துவச் செலவுகளும் ஏற்படத்தான் செய்யும். எனவே, சனிபகவான் வழிபாட்டை முறையாக மேற்கொள்ளுங்கள்.

குடும்ப உறுப்பினர்களில் யாருக்கேனும் இதே இராசி அமைந்திருந்தால் சனியின் வலிகை கூடுதலாகவே இருக்கும். அப்படிப்பட்டவர்கள் தங்களுக்குரிய சுய ஜாதகத்தைப் பார்த்து, பரிகாரங்களைச் செய்துகொள்வது நல்லது. மாதத் தொடக்கத்தில் புத்திர ஸ்தானம் வலுவடைந்து புதனுடன் இணைந்திருப்பதால் பிள்ளைகளுக்காக எடுக்கும் கல்வி முயற்சியில் இருந்த தடை அகலும். மருத்துவத் துறைப் படிப்பு, பொறியியல் துறை படிப்பு போன்றவற்றைத் தேர்ந்தெடுத்துப் படிக்கும் பிள்ளைகள் தேர்ச்சி பெறாமல் சில பாடங்களில் அரியர்ஸ் வைத்திருக்கிறார்களே என்று கவலைப்படும் பெற்றோர்கள் இனிவரும் தேர்வை எழுதச் சொன்னால் அதில் அவர்கள் வெற்றிபெறுவர்.

இராகு பலத்தால் இடமாற்றங்கள், வீடு மாற்றங்கள் போன்றவைகள் ஏற்படலாம். ஜென்ம கேதுவின் ஆதிக்கம் வலுவாக இருப்பதால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். தெய்வ பலத்தை முன்னிலை வைத்துச் செய்யும் செயல்களில் வெற்றி காண்பீர்கள். மாதத் தொடக்கத்தில் செவ்வாய், சனியின் பார்வை ஏற்படுகிறது. நீச்சம் பெற்ற செவ்வாய் உச்சம் பெற்ற சனியைப் பார்க்கப் போகிறார். எனவே, வாகன மாற்றச் சிந்தனை மேலோங்கும். பூமி விற்பனையால் லாபம் உண்டு.

**கடகச் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 19 ஆம் திகதி கடக் இராசியில் செவ்வாய் சஞ்சரித்து நீச்சம் பெறப் போகிறார். அதன்பிறகு அந்த நீச்ச செவ்வாயின் பார்வை உச்ச சனியின் மீது பதிகிறது. நீங்கள் செய்த புண்ணியம் குருவின் பார்வை உச்ச சனியின் மீது பதிகிறது. எனவே, திடீர் திடீரெனத் திருப்பங்கள் ஏற்படும். தெய்வீக ஈடுபாடுகளில் அதிக ஆர்வம் செலுத்துவீர்கள். வாழ்க்கைத் துணை வழியே விட்டுக்கொடுத்துச் செல்வதால் ஒற்றுமை பலப்படும்.

**உச்ச புதனின் சஞ்சாரம்!**

செப்ரம்பர் 2 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் உச்சம் பெறப்போகிறார். கடன் சுமை குறையும். காரிய வெற்றிக்கு புதிய நண்பர்கள் கை கொடுத்து உதவுவர். உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகள் எதிர்பார்த்தபடி அமையும்.

**சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சி!**

செப்ரம்பர் 7 ஆம் திகதி துலாம் இராசியில் சொந்த வீட்டில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். தங்கம், வெள்ளி போன்றவைகள் வாங்கிச் சேர்க்கும் எண்ணம் உருவாகும். கரைந்த சேமிப்புக்களை ஈடுகட்டுவீர்கள்.

இம்மாதம் இராசிநாதன் செவ்வாய் வலிமை இழப்பதால் அங்காரக பரிகாரம் செய்வது நல்லது. அதுமட்டுமல்ல, சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். சர்ப்ப சாந்தி செய்வதன் மூலம் அற்புத வாழ்வமையும்.

## சிவல்புரி சிங்காரம்



## இடபம்

கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

**எந்த மாற்றம் வந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தைப் பெற்ற இடப இராசி நேயர்களே!**

**புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும்!**

## புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும்

ஆவணி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் விரய ஸ்தானத்தில் கேதுவும் 6 இல் இராகும் வீற்றிருக்கிறார்கள். குடும்ப ஸ்தானத்தில் குருவும் செவ்வாயும் இணைந்து குருமங்கள யோகத்தை உருவாக்குகிறார்கள். கல்வி ஸ்தானத்தில் வித்யாகாரகன் புதனும் சூரியனும் இணைந்து புத- ஆதித்ய யோகத்தை ஏற்படுத்துகிறார்கள். எனவே, இம்மாதம் இனிய மாதமாகவே அமையு ம்.

குடும்பத்தில் சுபகாரியப்பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். வாயில் தேடி வரன்கள் வந்துவந்து கைவிட்டுப் போகிறதே என்று நினைப்பவர்களுக்கு இந்த மாதத்தில் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் விதத்தில் கிரக நிலைகள் சாதகமான நிலையில் இருக்கின்றன.

பணப்புழக்கம் அதிகமாகவே இருக்கும். பொறுப்புக்களில் இருப்பவர்களுக்குப் புதிய பதவிகள் வந்து சேரும். அரசியல்வாதிகளால் அனுகூலம் உண்டாகும் விதத்தில் சூரியனின் பார்வை பலம் இருக்கிறது.

என்ன இருந்தாலும் இராசிநாதன் சுக்ரன் நீச்சம் பெற்று இருக்கிறார். எனவே, ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகலாம்.

வாக்கு ஸ்தானாதிபதி புதன் வலிமை பெற்று சூரியனோடு இணைவதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்றிவிடுவீர்கள். வங்கிச் சேமிப்புகளை உயர்த்துவீர்கள். சொத்துக்களில் ஏற்பட்ட பிரச்சினை அகலும். உச்ச சனியின் ஆதிக்கம் உங்கள் வாழ்க்கையில் ஓர் உன்னத நிலையை ஏற்படுத்துக்கொடுக்க ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதமிருந்து சனி பகவானை வழிபட்டு வாருங்கள். காகத்திற்கு சோறு வைத்தால் தேக நலன் சீராகும். கல்வி சம்பந்தப்பட்ட முயற்சிகள் கைகூடும் விதத்திலேயே கிரக நில்லகள் அமைந்திருக்கின்றன. [illegible] பொருளாதார உயர்வு, [illegible] வெற்றி என ஒவ்வொன்றாக நடைபெறும்.

**கடகச் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 19 ஆம் திகதி கடக இராசியில் செவ்வாய் சஞ்சரித்து நீச்சம் பெறப்போகிறார். அதன்பிறகு நிச்ச செவ்வாயின் பார்வை, உச்ச சனியின் மீது பதிகிறது. அதனால் எதிர்ப்பு, வியாதி, கடன் எனப்படும் இடங்கள் வலுவடைகிறது. எனவே, திட்டமிட்ட காரியங்களில் திசைமாற்றம் ஏற்படலாம்.

என்ன இருந்தாலும் குருவின் பார்வை சனியின் மீது பதிவதால் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடி வரும். இந்த நேரத்தில் விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதன் மூலமும் சுப விரயங்களை மேற்கொள்வதன் மூலமும் மன அமைதிக்கு வித்திடலாம்.

**உச்ச புதனின் சஞ்சாரம்!**

செப்ரெம்பர் 2 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் உச்சம் பெறப் போகிறார். தன பஞ்சமாதிபதி 5 இல் உச்சம் பெறும் பொழுது பிள்ளைகள் [illegible] உதிரி வருமானங்கள் [illegible] பூர்வீக சொத்துக்களால் லாபம் கிட்டும். வாங்கல்- கொடுக்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள்.

**சுகம் தரும் சுக்ர பெயர்ச்சி!**

நீச்ச சுக்ரன் செப்ரம்பர் 7 ஆம் திகதி துலாம் இராசியில் பலம் பெறப் போகிறார்.இதன் விளைவாகப் பயணங்கள் அதிகரிக்கும். உத்தியோகம், தொழிலில் உயர்வு கிட்டும் உடல் ஆரோக்கிய் சீராகும். தங்கம், வெள்ளி போன்றவைகளும் மின்சாதனப் பொருட்களும் வாங்கும் வாய்ப்பு உருவாகும். உத்தியோக உயர்வு, சம்பள உயர்வு எதிர்பார்த்தபடி வந்து சேரும். இம் மாதம் நந்தி வழிபாடு நலம் சேர்க்கும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விமானம் துணையின்றி வானில் பறக்க...

விமானம் துணையின்றி தானாகவே வானில் பறக்கும் யுக்தி கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

இதை நியூசிலாந்தை சேர்ந்த நிபுணர்கள் வடிவமைத்துள்ளனர். பறக்கும் விசேட சட்டை 2 சிலிண்டர்களை கொண்டது. அதில் முன்னோக்கி தள்ளக் கூடிய காற்றாடிகள் உள்ளன. அவை கார்பன் இழையால் ஆன சட்டங்களில் பொருத்தப்பட்டுள்ளன.இந்த சட்டையை வானில் பறப்பவர் முதுகில் மாட்டிக்கொண்டு அதில் உள்ள பட்டை வாரினால் இறுக கட்டிக் கொள்ள வேண்டும். பறக்கும் போது அதில் உள்ள 2 கைப்பிடிகளை செல்லும் திசைக்கு தக்கபடி மாற்றிக் கொள்ளமுடியும்..

இதன் மூலம் மணிக்கு அதிகபட்சமாக 74 கி.மீற்றர் வேகத்தில் செல்ல முடியும். 30 கி.மீற்றர் தூரத்தை 30 நிமிடத்தில் சென்றடையலாம். 330 கிலோ எடையை தூக்கி செல்லலாம்.இந்த பறக்கும் உடை கிளன் மார்டின் என்பவரின் முயற்சியால் உருவானது. நியூசிலாந்து கிறிஸ்ட் சர்ச் நகரை சேர்ந்த இவர் கடந்த 1980ஆம் ஆண்டில் அதாவது 30 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கினார்..

அவர் தனது குழந்தை பருவத்தில் டி.வி.யில் ஒளிபரப்பாகிய "தண்டர்பர்ட்ஸ்", "லாஸ்ட் இன் ஸ்பேஷ்" போன்ற சாகச நிகழ்ச்சிகளை பார்த்து அதன் மூலம் ஆர்வம் ஏற்பட்டு இந்த முயற்சியை மேற்கொண்டனர். அவரது கனவு தற்போது தான் நனவாகி உள்ளது. இதை மாட்டிக் கொண்டு பறக்க நியூசிலாந்தின் விமான நிர்வாகம் அனுமதி வழங்கியுள்ளது. எனவே, இது அடுத்த ஆண்டு (2014) முதல் பயன்பாட்டுக்கு வருகிறது.



நவீன தொழில் நுட்பத்தின் வளர்ச்சி நாளுக்கு நாள் அதிகரிக்க இலத்திரனியல் சாதனங்களின் வடிவமும் அதன் பயன்படு சக்தியும் மாற்றமடைந்து வருகின்றது.
அந்தவகையிலே புதிதாக வெளிவந்துள்ள சில Pen Drive களை இங்கு காணலாம்.

# அதி நவீன லேசர்



தற்காலத்தில் பல்வேறு துறைகளிலும் லேசர் தொழில்நுட்பம் பயன் படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் தொடர்ந்தும் லேசர் தொடர்பான பல ஆராய்ச்சிகள் இடம்பெற்றுவருகின்றன.

இந்நிலையில் தற்போது உலகிலேயே அதிக வலுவுடைய லேசர் லைட்டர் உருவாக்கப்பட்டுள்ளது.

T lithium-ion மின்கலத்தினைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள இந்த லேசர் லைட்டர் ஆனது ஒரு சதுர மீற்றருக்கு 2,000,000 வாற்ஸ் வலுவை பிறப்பிக்கக்கூடியதாக உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் இதன் கதிர் அடர்த்தியானது சூரியனை விடவும் 2000 மடங்கு அதிகம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பார்வை இல்லாதவர்கள் காட்சிகளை காண அதி நவீன கருவி

கண் பார்வையில்லாதவர்கள் காட்சிகளை காணும் வகையில் அதி நவீன கருவியை ஆராய்ச்சியாளர்கள் வடிவமைத்துள்ளனர்.

கண் பார்வையற்றவர்கள் காட்சிகளை காணும் வகையில் நவீன கருவிகளை உருவாக்குவது குறித்து ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு நடத்தினர்.

இவர்களின் ஆராய்ச்சியின் பலனாக, காதில் பொருத்தப்படும் விசேஷ கருவியின் உதவியுடன் காட்சிகளை காணக்கூடிய வகையில், புதிய கருவியை உருவாக்கியுள்ளனர்.

இதுகுறித்து ஜெருசலேமில் உள்ள ஹீப்ரு மருத்துவப் பல்கலைக் கழகத்தை சேர்ந்த பேராசிரியர் அமிர் அமேதி கூறுகையில், கண் பார்வையற்றோரின் காதுகளில் பொருத்தப்படும் இந்த கருவி, காட்சிகளின் ஒளி அலைகளின் அதிர்வுகளை உள்வாங்கி அதை ஒலி அலைகளாக பதிவு செய்யும் தன்மை கொண்டது.

மேலும் இந்த கருவிகளில் பொருத்தப்பட்டுள்ள கமராக்களில் Visual Word Form எனப்படும் காட்சிகளுக்கான ஒளி மற்றும் ஒலியியல் மொழிகள் எழுதப்பட்டுள்ளன.

எனவே இவை உள்வாங்கிய ஒளி அலைகளை Visual Word Form- இல் ஒலி எழுத்துகளாக மாற்றி மூளைக்கு அனுப்புகிறது.

மூளையில் உள்ள காட்சிப் பதிவுகளை அறியும் பகுதியில், இவை மீண்டும் ஒளி அலைகளாக மாற்றம் செய்யப்படுவதால் இந்த கருவியின் மூலம் பார்வையற்றோரும் காட்சிகளை காண முடியும்.

இந்த கருவியை பார்வையற்றோரிடம் பரிசோதனை செய்ததில், நல்ல பலன் கிடைத்துள்ளது. அவர்களால் காட்சிகளை தெளிவாக காண முடிகிறது.

இந்த கருவியில் நிறைய காட்சிகளுக்கு ஒலி வடிவம் கொடுத்து அதற்கான மொழியை எழுத வேண்டியுள்ளது என்று தெரிவித் துள்ளார். மேலும் முதற்கட்ட ஆராய்ச்சியில் வெற்றி கண்டுள்ளதாக வும், முழு பணிகள் முடிந்த பின் கருவியை வெளியிடுவோம் என வும் தெரிவித்துள்ளார்.

# ஒலியைவிட வேகமாக பறக்கும் வாகனம்

போக்குவரத்து முறைகள் காலத்துக்கேற்ப மாற்றம் கண்டு வரும் நிலையில் எதிர்காலத்தில் எத்தகைய போக்குவரத்து முறைகள் எப்படி இருக் கும் என்பதற்கான அடையாளங்களும் இப்போதே தெரிய ஆரம்பித்துவிட்டது.

அமெரிக்காவை சேர்ந்த பிரபல தொழிலதிபர் எலான் மஸ்க் (Elon Musk), ஹைபர் லூப் (Hyperloop) என்ற பெயரில் புதிய போக்குவரத்து முறை குறித்த செயற்திட்டத்தை உருவாக்கியுள்ள தாக தெரிவித்துள்ளார்.

ரயிலை போன்றே தோற்றம் கொண்ட இந்த வாகனம் ஒலியை விட வேகமாக பறக்கும் கன் கார்டு விமானத்தின் தொழில் நுட்பத்தை கொண்ட தாக இருக்கும் என எலான் மஸ்க் (Elon Musk) தெரிவித்தார்.

மின்காந்த அலைகளை கொண்டு இயங்கும் இந்த வாகனம் தரையை தொடாமல் காற்றின் மேல் வழுக்கிக் கொண்டும் செல்வதாக இருக்கும். அமெரிக்காவின் முக்கிய நகரங்களான சான் ஃ பிரான்சிஸ்கோவுக்கும் லொஸ் ஏஞ்சலிசுக்கும் இடையிலான 600 கிலோ மீற்றர் தூரத்தை இந்த வாகனம் அரை மணி நேரத்தில் கடக்கும் என எலான் மஸ்க் (Elon Musk) தெரிவித்தார்.

இது விமான பயணத்தை விட இரு மடங்கு வேகமானதாக இருக்கும் என்றும் எலான் மஸ்க் (Elon Musk) கூறினார். மணிக்கு 800 மைல் வேகத்தில் செல்லும் இந்த வாகனம் செலவு குறை வானதாகவும் பாதுகாப்பு மிக்கதாகவும் இருக்கும் என்றும் எலான் மஸ்க் (Elon Musk) தெரிவித் தார.

# சூரிய ஒளியில் செயற்படும் மடிக் கணனிகள்

தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக கணனிகளின் அளவு சுருங்கி இன்று டேப்லட் வரை சிறிதாக மாறியுள்ளது. இந்நிலையில் அவற்றின் பாவனையை மேலும் இலகுபடுத்தும் பொருட்டு மேலும் பல தொழில் நுட்பங்கள் உட்புகுத்தப் பட்டுவருகின்றன.

அதற்கிணங்க தற்போது சூரிய ஒளியில் செயற்படக்கூடிய மடிக் கணனிகள் தயாரிக் கப்பட்டுள் ளன. இவற்றில் நீடித்து செயற் படக்கூடிய மின்கலம் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.



இதனால் 2 மணிநேரம் சூரிய ஒளியில் வைத்த பின்னர் சுமார் 8 தொடக்கம் 10 மணித் தியாலங்கள் வரை தொடர்ச்சியாக செயற் படக்கூடிய சக்தியை குறித்த மின்கலம் வழங்கு கின்றது. இந்நீண்ட பாவனையின் பொருட்டு இக்கணனிகளில் ருடிர வெர இயங்கு தளம் நிறுவப்பட்டுள்ளது.

WeWi Telecommunications எனும் கனேடிய நிறுவனத்தினால் உருவாக்கப் பட்டுள்ளது இக் கணனி.

# இரவு நேரங்களில் புகைப்படம் எடுப்பதற்கு



சிலவகை ஸ்மார்ட் கைப்பேசிகள், டேப்லட்கள் மூலம் இருள் சூழ்ந்த நேரங்களில் புகைப்படங் களை எடுப்பதற்கு Flash இணைக்கப்பட்டிருக்கும்.

எனினும் இவற்றின் தரம் குறைவாகவே காணப்படும். எனவே இதன் தரத்தை கூட்டுவதற் காக iblazr LED Flash எனும் துணைக் கருவி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இச்சாதனமானது ஒரே வகையான 4 LED Flash - களை கொண்டுள்ளதுடன வெளிச்சம் கொடுக்கக்கூடியதாகக் காணப்படுகின்றது.

இச்சாதனத்தை ஹெட்போன்களை இணைக் கும் பகுதியில் இணைக்கக்கூடியதாகவும் வடி வமைக்கப்பட்டுள்ளது.

மேலும் 200 mAh மின்கலத்தின் மூலம் 1000 தடைவைகள் Flash செய்யக்கூடியதாகவோ அல்லது தொடர்ச்சியாக 40 நிமிடங்களுக்கு ஒளிரச்செய்யக்கூடியதாகவோ இது காணப்படு கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலய சூழலில்...

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவத் தமிழ் பண்பாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் தெய்வீகப் பேருரை கலை நிகழ்வு, மாணவர் சொற்பொழிவு, கலைஞர் கௌரவிப்பு நிகழ்வுகள் மஹோற்சவ காலங்களில் தினமும் பிற்பகல் 6.30 மணி முதல் இரவு 8 மணிவரை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடைபெறும்.

இதன்படி இன்று வெள்ளிக்கிழமை அராலியூர் கே.மங்கள மூர்த்தி வழங்கும் **எந்த வேளையும் கந்த வேளே துணை** என்ற விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் முருகன் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு உற்சவ காலத்தில் தினமும் மாலை 6.45 முதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க் காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

மஹோற்சவத்தின் ஐந்தாம் நாளான இன்றைய இசையரங்கில் சிவஸ்ரீ மகாதேவ சோம சுந்தர சர்மாவின் மாணவிகள் வழங்கும் வீணை இசை நிகழ்வு இடம்பெறவுள்ளது. இதற்கான மிருதங்க இசையை எஸ். துரைராசா வழங்கவுள்ளார்.

தொடர்ந்து ந.தனசொரூபி வழங்கும் இசைக்கச்சேரி இடம்பெறவுள்ளதுடன் இக்கச்சேரியில் அணிசெய்கலைஞர்களாக வயலின் அ.ஜெயராமன், மிருதங்கம் க.கண்ணதாசன், கெஞ்சிரா கே. அனந்தகோபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்த சுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ். பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 12 ஜோதிலிங்க தரிசனம் தினசரி முற்பகல் 8 மணிவரை நல்லூர் வீரமாகாளியம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சிந்தனை, சமயச் சொற்பொழிவு, கலை நிகழ்வுகள் என்பன உற்சவகாலத்தில் தினமும் பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை நல்லூர் ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றன. இன்றைய நிகழ்வுகளாக சைவப்புலவர் பொன். சுகந்தன் வழங்கும் நலம்காப்பான் நல்லூரான் என்ற விடயப் பொருளுடனான சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து ஏழாலை ஸ்ரீ கண்ணகி அம்பாள் அறநெறிப்பாட சாலை, சங்கானை வெல்வில் அறநெறிப் பாடசாலை புன்னாலைக்கட்டுவன் திடப்புலம் நரசிங்க வைரவர் அறநெறிப் பாடசாலை கோண்டாவில் நெட்டலிப்பாய் ஸ்ரீகணேசா அறநெறிப் பாடசாலை மாணவர்களினால் வழங்கப்படும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(அ-5)

## 1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தி) இன் கீழ் அறிவித்தல்.

2013.04.04 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கி பணிப்பாளர் சபை விசேடமாகவும ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது.

1. பிரசித்த நொத்தாரிசு திரு.S.N.விஸ்வலிங்கம் அத்தாட்சிப்படுத்திய 2011.05.31 திகதியிட்ட ஈட்டு முறி இல.4174 மற்றும் 2011.09.22 திகதியிட்ட மேலதிக ஈட்டுமுறி இல.4283 ஆகியவற்றின் பேரில் A9 றோட், நுணாவில், சாவகச்சேரி என்னும் முகவரியைச் சேர்ந்த திரு.சீவரத்தினம் கோபிதாசன் மற்றும் திருமதி ரஞ்சிதமலர் கோபிதாசன் ஆகியோரிடமிருந்து கூட்டாகவும் தனித்தனியாகவும் முதலும் 2013.02.13 வரை வட்டியும் முப்பத்திரெண்டு மில்லியன் ஐநூற்று நான்கு ஆயிரத்து அறுநூற்றுப்பதினாறு ரூபாய்களும் எண்பத்தெட்டு சதங்களும் (ரூ 32,504,616/88) மற்றும் இருவது மில்லியன் அறுநூற்றுப் பதினான்கு ஆயிரத்து நூற்று எண்பத்தொன்பது ரூபாய்களும் அறுபத்தாறு சதங்களும் (20,614,189/66) அத்துடன் 30 மில்லியன் ரூபாய்களும் (ரூ 30, 000, 000) மற்றும் பதினெட்டு மில்லியன் எழுநூற்று எட்டு ஆயிரத்து எழுநூற்று எழுபத்து நான்கு ரூபாய்களும் பதினைந்து சதங்களில் (ரூ18,708,774/15) முறையே ஆண்டுக்கு பதினொரு தசம் மூன்று ஏழு (11.37%) மற்றும் பன்னிரெண்டு தசம் மூன்று ஏழு (12.37) வீதத்தில் 2013.02.14 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. பிரசித்த நொத்தாரிசு திரு.S.N. விஸ்வலிங்கம் அத்தாட்சிப்படுத்திய மேற்குறிப்பிட்ட 2011.05.31 திகதியிட்ட ஈட்டு முறி இல.4174 மற்றும் 2011.09.22 திகதியிட்ட மேலதிக ஈட்டு முறி இல.4283 ஆகியவற்றின் பேரில் வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட முப்பத்திரெண்டு மில்லியன் ஐநூற்று நான்கு ஆயிரத்து அறுநூற்றுப் பதினாறு ரூபாய்களும் எண்பத்தெட்டு சதங்களும் (ரூ32,504,616/88) மற்றும் இருபது மில்லியன் அறுநூற்றுப் பதினான்கு ஆயிரத்து நூற்று எண்பத்தொன்பது ரூபாய்களும் அறுபத்தாறு சதங்களும் (20,614,189/66) அத்துடன் 2013.02.14 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல.692, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு.K.P பாலகிருஸ்ணன் அவர்களுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவும் (397 ஆம் அத்தி) அதன் திருத்ங்களுக்கமையவும் மேற்குறிப்பிட்ட இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி மானிப்பாய் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகிறது.

### மேற்குறிப்பிட்ட அட்டவணை

வடமாகாண யாழ்.மாவட்டம் தென்மராட்சிப் பிரிவில் நாவற்குழி பகுதியில் கைதடி நுணாவிலில் அமைந்த மருதையினார் சாட்டியும் ஏனைய பகுதிகளும் என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் A.கமலசேகரம் தயாரித்த 2010.09.26 திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல.4304 இல் துண்டு 1 என விபரித்த 33 லாச்சம் V.C. மற்றும் 06 குழிகள் விஸ்தீரணமுடைய எனினும் தற்சமயம் 32 லாச்சம் V.C. யும் 14.30 குழிகளும் விஸ்தீரணமுடைய காணியின் தற்சமய எல்லைகளாவன கிழக்கில் தாமோதரம்பிள்ளை பொன்னையாவினதும் சின்னத்தம்பி அருளையாவினதும் பங்குரிமையாளர்களினதும் ஆதனங்களும் வடக்கில் கண்டி றோட்டும் மேற்கில் ஒழுங்கையும் தெற்கில் சுப்பிரமணியத்தின் மனைவி பராசக்தியினதும் சின்னத்தம்பி அருளையாவினதும் ஆதனங்களும் ஆகும். இவை யாவும் F 810/227 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,
இலங்கை வங்கி,
மானிப்பாய் மேற்தரக்கிளை,
திகதி: 30.07.2013

(சி-4331)

[illegible],
கிளை முகாமையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூரான் திருவடிக்கு ஐந்தாம் திருவிழா



## வருவான் முருகன்

நல்லை நகர் வீதியிலே
மயில் மீது அமர்ந்திருந்து
அடியவர்களைக் காத்திடும்
அலங்கார கந்தனே
அசுரர்களை அழித்து
தேவர்களைக் காத்திட்ட
ஆனைமுகன் தம்பியே
எங்களைக் காத்திட
மயிலேறி வருவாயா? முருகா

க.செல்வமலர்
சிறுவர் இல்லம்

## அந்த ஒரு ரூபாவைக் கொண்டு

நாமோ படிக்க வேண்டியது ஏராளமுண்டு அதுவும்
நல்லூரில் படிக்க வேண்டியது தாராளமுண்டு,
ஆமோதிப்பவர்களுக்கு உலகில் பேரின்பமுண்டு,
அதிலே நேரந்தவறாத பூஜையில் முருகன் வரமுண்டு.

எந்தப் பெரிய ஆளாயிருந்தாலும் நல்லூரிலே
அந்த ஒரு ரூபாவுக்குள்ள மகிமை வேறெங்கிலுமில்லை
சொந்தமாய் எத்தனை கோடி வைத்திருந்தாலும்
சொக்கிப் போவாய் அந்த ஒரு ரூபாவைக் கண்டு

கோயிலைச் செவ்வனவே நடத்தும் எஜமான் கூட
கை குவித்து மூலையில் ஓரமாக ஒழுங்கமைப்பார்,
வாயில் தோறும் நடப்பவற்றை அவதானித்திருப்பார்
வார்த்தையெதுவும் பேசாது எளிமையோடிருப்பார்

நாவலர் சொன்ன நடைமுறைகள் எல்லாமே
நலிவின்றி, குறைவின்றி நடக்கிறது! முருகா
நீவலம் வரும் காட்சிக்கு நிகரேது? உலகேது?
நீ, நீயாக, நுமக்காக வன்றி, நேர்மையோடு வணங்கிப்பார்!

கேட்டது கிடைக்கும் நீ நேர்மையானவன் ஆகில்
கெட்டவை நீங்கும் நீ உன்னைத் திருத்துவாயானால்
போட்டது பயன்தரும் நீ உழைப்பது நிஜமானால்,
பொல்லாப் பொன்றில்லை போய்வா நல்லூருக்கு...

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்

## நல்லூரானே அருள் புரிவாயா?

கந்த புராண கதா நாயகனே
எம் கரம் கொண்டு
உனை தொழுகின்றோம்
வரம் தருவாயா வீர ராஜனே
மாங்கனிக்காய் மயிலேறி
உலகம் சுழன்றாய்
எம் மக்களின் துயர் துடைக்க
அருள் புரிவாய் வெற்றி வேலனே!

நெடுந்தீவு முகிலன்

## நல்லூர் கந்தன் அநுபூதி

தந்தைக் குபதே சம்செய் பவனே
விந்தைக் குமரா விளையு மடியார்க்
கெந்தக் குறையு மிணையா தொழிக்கும்
கந்தா! கடம்பா! கதிர்நல் லூரா!

கலாபூஷணம், சந்தக் கவிஞர். நவ.பாலகோபால்

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# அணு தொழில்நுட்பத்தின் நன்மைகளும் தீமைகளும்

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

ஹிரோசிமா மற்றும் நாகசாகி நகரங்களில் குண்டுவெடிப்பில் வெளிப்பட்ட Gama கதிர்களினால் தாக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண்களின் கருவை பரிசோதித்துப் பார்த்தபோது பாரிய முரண்


நாகசாகி அணுகுண்டுத் தாக்க நினைவாலயம்

பாடுகள் ஏற்பட்டிருப்பதை அறிய முடிந்தது. இத்தகைய பெண்களின் பிள்ளைகள், நரம்பு மண்டலம் தாக்கப்பட்ட மூளை சிறுத்த சிறிய தலையுடனும் வளர்ச்சியடையாத கண்களுடனும் அங்கக் குறைபாடுகளுடன் மனவளர்ச்சி குன்றியவர்களாகப் (Mental Retardation) பிறந்தனர்.

அணுகுண்டானது ஆயிரக் கணக்கான உயிர்களைப் பறிக்கக்கூடிய ஒரு பயங்கரமான ஆயுதமாகும். இதன் வலிமை உயிர் தப்பியோரையும் அவர்களின் சந்ததியினரையும் விடாது தாக்கக் கூடிய சக்தி படைத்தது. இதன் தாக்கத்தை உணர்ந்த பிரித்தானிய


Enrico Fermi

மேதையான Bertrand Russell ஆல் தயாரிக்கப்பட்ட "அணுவாயுதப் போர்த் தடுப்பு" ஒப்பந்தத்தில் 1955ஆம் ஆண்டளவில் வாழ்ந்து கொண்டிருந்த உலகத்து விஞ்ஞானிகளும் உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானியான அல்பேட் ஐன்ஸ்ரைனும் கையொப்பமிட்டு அணுவாயுதப் பயன்பாட்டுக்கு எதிராகக் குரலெழுப்பினர்.

**அணுப் பிளவு**

நோபல் பரிசு பெற்ற இத்தாலிய விஞ்ஞானியான என்றிக்கோ ஃபெரிமி (Enrico Fermi) முதன் முதலாக அணுப்பிளவை ஏற்படுத்தினார். 1934ஆம் ஆண்டு ஜனவரியில் யுரேனியத்தை நியூத்திரனால் மோதச் செய்து அதை இருகூறாக்கிய பெருமை என்றிக்கோ ஃபெரிமி (Enrico Fermi) ஐயே சாரும். எனினும் இவ் அணுப்பிளவை என்றிக்கோ ஃபெரிமி (Enrico Fermi) ஆல் அன்று அதனைச் சரியாகப் புரிந்து


ஒற்றோ கான்

(Otto Hahn)

கொள்ள முடியவில்லை. தான் ஒரு புதிய மூலகத்தை உருவாக்கி விட்டதாக என்றிக்கோ ஃபெரிமி (Enrico Fermi) தவறாக நம்பினார். அடுத்த நான்கு வருடங்களில் மேற்படி அணுப்பிளவு பல தடவைகள் பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி போன்ற நாடுகளில் மேற்கொள்ளப் பட்டாலும் என்ன உருவாகியுள்ளது என அப்போது விஞ்ஞானிகளுக்குப் புரியவில்லை.

விஞ்ஞானத் துறையைச் சேர்ந்த தம்பதிகளான Ida & Walter Noddack ஆகியோர் ஜேர்மனியிலிருந்து வெளிவரும் Applied Chemistry எனும் சஞ்சிகையில் என்றிக்கோ ஃபெரிமி (Enrico Fermi) இன் பிழையான கருத்தைப் பற்றி தமது கருத்தை எழுதியிருந்தனர். அதாவது "பாரமான உலோகமான யுரேனியம் நியூத்திரனால் தாக்கப்பட்டு பிளவுபட்டு பல துணுக்குகளாகப் பிரிகின்றது" என எழுதியிருந்தனர். எனினும் மேற்படி தம்பதியினரின் கருத்து என்றிக்கோ ஃபெரிமி (Enrico Fermi) உட்பட ஏனைய விஞ்ஞானிகளால் அன்று ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மாபெரும் சக்தியைக் கொண்டுதான் அணுவைப் பிளக்க முடியுமென என்றிக்கோ ஃபெரிமி (Enrico Fermi) நம்பினார். அநேகமான பௌதிகவியல் வல்லுநர்கள், யுரேனியத்தை நியூத்திரனால் மோதும் போது அது நியூத்திரனை உள்வாங்கி ஒரு புது மூலகத்தைத் தோற்றுவிக்கின்றது என நம்பினார்கள். ஐன்ஸ்ரைனும் அணுவைப் பிளப்பது அவ்வளவு எளிதான காரியமன்று என்ற கருத்தைக் கொண்டிருந்தார்.

**லிஸ் மெயிட்னர் (Lise Meitner) இன் அணுக் கருப்பிளவிற்கான விளக்கம**

நியூத்திரனைக் கொண்டு மோதி அணுக்கரு உடைப்பு (Nuclear Bombardments) பற்றிய ஆராச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்த பெண் விஞ்ஞானிகளுள் ஐரீன் கியூரிலிஸ் மெயிட்னர் (Lise Meitner) மற்றும் ஒற்றோ கான்


ஒற்றோ றொவேட் பிறிஸ்

(Otto Robert Frisch)

(Otto Hahn) என்பவர்கள் முக்கியமானவர்கள். இயற்கைக் கதிரியக்கம் பற்றி ஆராய்ச்சி செய்து அதுபற்றி விளக்கி நோபல் பரிசு பெற்ற மேரி கியூரியின் மூத்த புதல்விதான் ஐரீன் கியூரி. ஐரீன் கியூரி தாயைப் போல் செயற்கைக் கதிரியக்கம் பற்றி ஆய்வு செய்து நோபல் பரிசைப் பெற்றுக்கொண்டவராவார். ஒற்றோ கான் (Otto Hahn) என்பவர் ஜேர்மனிய விஞ்ஞானியாவார்.


பிரிஸ் ஸ்ரெஸ்மான்

(Fritz Strassman)

இவ் ஒற்றோ கான் (Otto Hahn) என்பவருடன் 30 வருடங்களுக்கு மேலாக ஆய்வு கூட உதவியாளராகப் பணியாற்றியவர்தான் லிஸ் மெயிட்னர் (Lise Meitner). ஒற்றோ கான் (Otto Hahn) உம் லிஸ் மெயிட்னர் (Lise Meitner) உம் பல தடவைகள் யுரேனியத் தேய்வு அணுக்கரு இயக்கங்களை நிகழ்த்தி ஆராய்ந்ததன் விளைவாக இவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய மூலகம் "Protoactinium" என்பதாகும். யூதரன லிஸ்மெயிட்னர் (Lise Meitner), ஹிட்லரின் ஆட்சிக்குப் பயந்து 1938ஆம் ஆண்டு சுவீடனுக்குச் சென்று அங்கு Stockholm எனும் இடத்திலுள்ள Nobel Institute எனும் ஆய்வகத்தில் சேர்ந்து தன் ஆராய்ச்சிகளைத் தொடர்ந்தார்.

"நியூத்திரனைக் கொண்டு யுரேனிய அணுவை உடைக்க முடியும்" எனும் ஐரீன் கியூரியின் கருத்தைப் பின்பற்றி, யுரேனியம் - நியூத்திரன் தாக்கத்தை உண்டு பண்ணி முதன்முதலில் அணுவை உடைத்ததாக ஒற்றோ கான் (Otto Hahn) உம் அவரது நண்பரான பிறிஸ் ஸ்ரெஸ்மான் (Fritz Strassman) உம் 1938 ஆம் வருடம் ஜேர்மனியில் அறிவித்தனர். இவ்வரிய புதிய கண்டுபிடிப்பைப் பற்றி ஒற்றோ கான் (Otto Hahn), சுவீடனில் வசித்துவரும் தனது பழைய நண்பியான லிஸ் மெயிட்னர் (Lise Meitner)க்கு கடித மூலம் தெரியப்படுத்தினார். இதனையறிந்த லிஸ் மெயிட்னர் (Lise Meitner) உம் அவரது உறவினரான ஒற்றோ றொவேட் பிறிஸ் (Otto Robert Frisch) உம் சேர்ந்து இயற்கை (Nature) எனும் சஞ் சிகைக்கு அணுக்கரு உடைப்புப் பற்றி விபரித்து எழுதினார்கள். அதில் அணுக்கருப் பிளவு (Nuclear Fission) நிகழ்ந்துள்ளது எனும் பதத்தைப் முதன் முதலில் பயன்படுத்தியிருந்தனர்.

இதற்கு முன் அணுவைப் பிளந்தவர்கள் பலர் இருப்பினும் ஐரோப்பிய விஞ்ஞானிகளான லிஸ் மெயிட்னர் (Lise Meitner) மற்றும் ஒற்றோ றொவேட் பிறிஸ் (Otto Robert Frisch) ஆகிய இருவருமே முதன்முதலில் அணுப் பிளவை உலகிற்கு விளக்கிய


லிஸ் மெயிட்னர்

(Lise Meitner)

பெருமைக்குரியவர்கள். இந்த ஒற்றோ றொவேட் பிறிஸ் (Otto Robert Frisch) தான் பின்நாளில் அமெரிக்காவுக்குச் சென்று அங்குள்ள அணுகுண்டு விஞ்ஞானிகளோடு சேர்ந்து அணுகுண்டுக்குத் தேவையான யுரேனியம், புளூட்டோனியம் என்பவற்றின் அளவைக் கணித்து, முதலாவது அணுகுண்டை செய்ய அமெரிக்காவுக்கு உதவியவராவர்.

*(தொடரும்...)*

திருமதி G.செல்வலட்சுமி
**B.Sc (Hons), P.G.D.E. (Merit)**
ஆசிரியர்,
யாழ்.வேலணை மத்திய கல்லூரி

$$ {}_{0}^{1}n + {}_{92}^{235}U \rightarrow {}_{35}^{87}Br + {}_{57}^{148}La + {}_{0}^{1}n $$




## வாரத்திற்கு ஒரு புதிர்! 90

**22ஆயிரம் தொன் TNT வெடி சக்தியைக் கொண்ட புளூட்டோனியக் (Plutonium-239) குண்டு நாகசாகி நகரின் மீது வீசப்பட்டது. இக்குண்டுக்கு வைக்கப்பட்ட பெயர் என்ன?**

**புதிர் 90 இற்கான விடைகளை 26.08 .2013 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

**திரு.அ.குகன்**
**ஆசிரியர் பிரிவுA**
**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,**
**ஆசிரிய கல்வியியலாளர்,**
**யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி,**
**கோப்பாய்.**

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.ஈஸ்வரமோகனிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதிர் 89 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

தே.ராஜகோபால்
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை.

**புதிர் 89க்கான கேள்வியும் விடையும்:**
அமெரிக்கா தனது முதல் அணுகுண்டுச் சோதனையை நியூமெக்சிக்கோ நகரில் Trinity எனும் இடத்தில் அமைந்திருந்த அணுகுண்டுச் சோதனைத் தளத்தில் நிகழ்த்தியது. இச்சோதனைக்குத் தலைமை தாங்கிய அணுகுண்டின் பிதா என அழைக்கப்படுபவரின் பெயர் என்ன?

றொபேட் ஒப்பன்கைமர் (Robert Oppenheimer)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல. 90

சரியான விடை:-..........
முழுப்பெயர்:-..........
முகவரி:-..........
தொ.பே. இல:..........
கையொப்பம்:..........

மாடுமோ செத்தல் மாடு; வண்டியுமோ ஓட்டை வண்டி
மாடு இழுக்க மாட்டாமல் மாய்கிறாண்டி உன் புருசன்.
- நாட்டார் பாடல்கள்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk


# எங்கள் கனவும் உங்கள் கனவும்

புலம்பெயர் தமிழர்கள் ஈழம் என்ற கனவில் இருப்பதாகவும், அதற்கான முயற்சிகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பீரிஸ் இனவாதம் அற்றவர் என்ற நினைப்பு தமிழ் மக்களிடம் இருந்ததாயினும் அந்த நினைப்பு இல்லாமல் போய் பல ஆண்டுகளாகிவிட்டது.

ஈழம் என்ற கனவில் புலம்பெயர் தமிழர்கள் இருப்பதாக அமைச்சர் பீரிஸ் கூறுவதன் அர்த்தம் என்ன என்பது புரியவில்லை.

உண்மையில் தமிழ் மக்கள் தனி ஈழம் என்று உச்சரித்ததைவிட, பெரும்பான்மை இனத்தினர் அதை உச்சரித்ததே அதிகம் எனலாம்.

இப்போது கூட ஈழம் என்று உச்சரிக்கும் அமைச்சர் பீரிஸ் புலம்பெயர் தமிழர்கள் தனித் தமிழீழம் பற்றி கனவு காண்பதாகவும் கூறியுள்ளார்.

இங்கு புலம்பெயர் தமிழர்கள் கனவு காண்கிறார்கள் என்பதுகூட ஒருவகையான கனவு நிலைதான்.

அதாவது, தனித் தமிழீழம் என்பது பற்றி தமிழ் மக்கள் மறந்து போனாலும், அமைச்சர் பீரிஸ் அதனை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டிருப்பதானது உண்மையில் கனவு காண்பது யார் என்ற கேள்வியை எழுப்பும்.

அதேநேரம் தனித் தமிழீழம் பற்றி தமிழர்கள் கனவு காண்பதற்கும் சிங்களவர்கள் கனவு காண்பதற்கும் இடையில் நிறையவே வேறுபாடு உண்டு.

தனித் தமிழீழம் பற்றி தமிழர்கள் கனவு காண்பார்களாயின் அது அவர்களுக்கு ஏதோ ஒரு வகையில் புளகாங்கிதமாக அமையும். அதனால் இக்கனவு அவர்களை ஒரு போதும் பாதிக்கப்போவதில்லை.

மாறாக உறக்கத்திலேனும் தமிழர்கள் மகிழ்வோடும் இருப்பதற்கு இக்கனவு உதவும்.

ஆனால் தனித் தமிழீழம் என்ற கனவை சிங்கள மக்கள் காண்பார்களாக இருந்தால், அது பெரும் அதிர்ச்சியாகவும் உறக்கத்திற்கு ஊறு விளைவிப்பதாகவும் இருக்கும்.

ஆகையால் இக்கனவு காலக்கிரமத்தில் உடல், உள ரீதியான பாதிப்புக்களையும் ஏற்படுத்தி, உறங்க விடாமலே செய்துவிடலாம்.

ஆக, அமைச்சர் பீரிஸ் ஏதேனும் கதைக்க வேண்டும் என நினைத்தால் அதற்காக இருக்கக்கூடிய விடயங்கள் ஏராளம் உண்டு.

இதைவிடுத்து தனித்தமிழீழம் அமைப்பதிலும், அதற்காக முயற்சிப்பதிலும் புலம்பெயர் தமிழர்கள் ஈடுபடுவதாகக் கூறுவது, சுமுகமான நிலைமையைக் குழப்பிவிடக்கூடியது.

தமிழர்களுக்கு மாகாணசபை உரிமைகளைக் கூட வழங்குவதற்கு விருப்பமில்லாத மனநிலையில் இருக்கும் ஆளும் வர்க்கம், தங்கள் ஏக்கங்களையும், மனப்பாதிப்புக்களையும் தமிழ் மக்களின் பக்கம் சுமத்துவது அழகல்ல.

ஆகையால் தேவையற்றவற்றைக் கதைப்பதை விடுத்து தேவையுள்ளவற்றை செய்வது நாட்டின் அமைதிக்கும் இன ஒற்றுமைக்கும் உதவும் என்ற கருத்தை அமைச்சர் பீரிஸுக்கு கூறிவைக்க நடுவு நிலையானவர்கள் முன்வர வேண்டும்.

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

(கரவெட்டி)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் வடமராட்சி பிரதேசங்களை சேர்ந்த விளையாட்டுக்கழகங்களிலிருந்து பங்கு பற்றும் அணிகளுக்கு 5 ஓவர் 6 பேர் கொண்ட கிரிக்கெட் போட்டிகள் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் இடம் பெறவுள்ளது.

இதில் பங்குபற்றும் விளையாட்டுக் கழகங்கள் போட்டி இடம்பெறும் தினங்களில் காலை 8 மணிக்கு முதல் தமது பதிவுகளை மேற்கொண்டு, போட்டியில் பங்கு கொள்ளுமாறும் அல்லது 077 413 4011 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் அறிவித்துள்ளது. (அ-9-24)

## நெல்லியடியில் தேர்தல் விளம்பரம் நீக்கும் பணியில் பொலிஸார்

(கரவெட்டி)

வடமராட்சி நெல்லியடி நகரப் பகுதியில் தேர்தல் பிரசாரத்திற்கென வைக்கப்பட்டிருந்த வேட்பாளரின் கட்டவுட்டுக்கள் தேர்தல் திணைக்களத்தினரால் நேற்று முன்தினம் புதன் கிழமை அகற்றப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் யாழ்.மாவட்ட வேட்பாளரின் கட்டவுட்டுக்களும் கட்சிக் கொடிகளும் நெல்லியடி நகரப் பகுதிகளிலும் அதனை அண்மித்த பகுதிகள் அங்காங்கே வைக்கப்பட்டும் அலங்கரிக்கப்பட்டுமிருந்தன.

இது தொடர்பாக சக வேட்பாளர்களால் தேர்தல் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, நேற்றுமுன்தினம் இரவு, நெல்லியடி நகரப் பகுதிக்கு வருகை தந்த தேர்தல் கண்காணிப்பாளர்கள் கட்டவுட்டுகளை அகற்றியதுடன் கொடிகளையும் பொலிஸாரின் உதவியுடன் அறுத்தெறிந்துள்ளனர்.

தேர்தல் சட்ட விதிமுறைகளின் படி கட்டவுட்கள் வைப்பது தடை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-24)

## மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியில் பங்குபற்றலாம்

(தனங்களப்பு)

தெல்லிப்பழை கலைச்செல்வி சனசமூக நிலையத்தினால் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு புன்னாலைக்கட்டுவன் மான் பாய்ந்தான் வெளியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்புவர்கள் அன்றைய தினம் குறித்த இடத்திற்கு சமூகம் தந்து பங்குபற்றலாமென சனசமூக நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (அ-9-37)

## சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

### இந்துவாக வாழ்வோம்

நல்லைக் கந்தப்பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்கள்

15.08.2013க்கான வினாவும் விடையும்:-

வினா:- நித்திரைக்குச் செல்லும்முன் இறைவனை வணங்குவது ஏன்?

விடை: மனதுக்கு அமைதியைக் கொடுப்பதும் ஆறுதலாக இருப்பதுமான இறைவனது ரூபங்களை (அது எந்தத் தெய்வமாகவும் இருக்கலாம் அல்லது குரு அல்லது மகானானக்கூட இருக்கலாம்) தியானித்துக் கொண்டு நித்திரை செய்யும்போது எம்மனதில் உள்ள கஷ்டங்கள், நெருக்கீடுகள் ஆகியன குறையும்.

வாழ்நாள் முழுக்க எந்த நினைப்பு ஒருவருடைய மனதில் அதிகமாக இருக்கிறதோ அதனைப் பற்றிய சிந்தனைதான் இறக்கும் தறுவாயிலும் வரும்.

ஒருவன் அந்திமத்திலும் எதைஎதை நினைத்துக்கொண்டு உடம்பை விட்டாலும் அதையே போய் அடைகின்றான் என்று கீதை சொல்கிறது. எனவேதான் நித்திரைக்குப் போகும்போது இறைவனை வணங்குவதைப் பழக்கத்திற்கொண்டால் அது எம்மை முத்தி அல்லது மோட்சத்துக்குக் கொண்டு செல்லும்.

16.08.2013: வினா:- ஒவ்வொரு இந்துவும் காலையில் துயிலெழும்போது அவசியம் செய்யவேண்டிய மூன்று கருமங்கள் (செயல்கள்) எவை?

விடை நாளை...

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடைகளை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல் லது எழுதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி (01.09.2013) மாலை 4 மணிக்கும் 8 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் கையளிக்கும் போது துணுக்குகளில் வரும் கேள்விகளுக்கு சரியான பதிலைச் சொல்லும் அனைவருக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். 18 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

சின்மயா மிஷன்
யாழ்ப்பாணம்

இல.9, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.




### பொறுமையின் சிறப்பு

நபிகள் நாயகம் (ஸல்) நயின்றார்கள்: " இன்னும் எவர் மக்களிடத்தில் தேவையற்றவராக இருக்க விரும்புகிறாரோ அவரை அல்லாஹ்ற தேவையற்றவராகவே இருக்கச் செய்கிறான். இன்னும் எவர் பொறுமையாக இருந்து கொள்கிறாரோ அவரைப் பொறுமையுள்ளவராக அல்லாஹ்ற ஆக்குகிறான். பொறுமையைவிட சிறந்ததும் விசாலமானதுமான வேறு கொடை எதுவும் எவருக்கும் கொடுக்கப்படவில்லை என்பதையும் நினைவிற்கொள்ளுங்கள்.."

அறிவிப்பாளர்: அபூஸயீதினில் குத்ரீ (ரலி) நூல்: புகாரி




சுடுகாடு என்பது எல்லோரும் ஒதுக்கி வைக்கின்ற இடமாகும். மனிதனின் இறப்புக்கிரியை நடைபெறும் தூய்மையற்ற இடமாகவும் உளது. வாழ்க்கை அடங்கும் இடமெனவும் குறிப்பிடுவர். இறந்த உடல்களைத் தீயிட்டு எரித்து சாம்பராக்கும் செயற்பாடு நடைபெறுமிடமாதலால் சுடுகாடு எனப்பட்டது. மணிவாசகர் இறைவனைச் சுடுகாட்டரசே! என விளிக்கின்றார். எல்லாம் ஒடுங்குகின்ற இடமாகிய சுடுகாட்டில் இருக்கும் இறைவன் உருவை விரிந்து எரியும் சுடர் அனையாய் என விளக்கியுள்ளார். எங்கும் பரந்து உயர்ந்து தெரிகின்ற தீப்பிழம்பு போல இறைவன் தோன்றுகின்றான்.

காரைக்காலம்மையாரே இறைவனிருப்பிடம் சுடுகாடு எனக்குறிப்பிட்டு முதலில் பாடியவராவார். அவர் பாடிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் இதற்குச் சான்றாக உள்ளது. இன்னும் பசுஞானம், பாசஞானம் என்பவற்றால் எவரும் தொடர்ந்து அறிதற்கு அரியவன். ஆனால் துணையற்ற தனக்குத் தனிமையைப் போக்குகின்ற ஒப்பற்ற துணையாகும் என்கின்றார். உலகியல் வாழ்வில் பலர் தனிமைத் துன்பம் தாளாமல் வருந்துகின்றனர். குறிப்பாக முதியோர் இந்நிலையிலுள்ளனர். அவர்கள் தனிமையைப் போக்க இறைவழிபாடே உகந்ததாகும்.

மணிவாசகர் தனது துன்பத்தின் காரணத்தையும் நன்கறிந்தவர். ஐம்புலன்களே அவரைப்பெரிதும் வருத்துகின்றன. அவற்றுள் சிறப்பாக ஒரு புலன் வழியால் தான் மயங்கி நிற்பதைக் கூறுகிறார்.

அஞ்சொல் நல்லார் அவர்தம் விடர் விடலேனை அழகிய சொற்களைப் பேசுகின்ற மகளிருடைய முழைஞ்சு போன்ற புழையினை விட்டு நீங்கும் ஆற்றல் இல்லாதவன் எனத் தன்னைக் குறிப்பிடுகிறார். விடர் என்பது மலையிடையே உள்ள பிளவாகும். பெண்களின் பருத்த இருமுலைகளுக்கு இடையேயுள்ள பிளவையே அவர் விடர் எனக் கூறியுள்ளார். இச்சொல் தற்போது பேச்சுமொழியில் வழக்கிழந்து விட்டதெனலாம். பேச்சினால் தன்னை மயங்கச் செய்யும் பெண்களை, அவர் தொடர்பை அவரால் விடமுடியாமல் படும் துன்பத்தை வெளிப்படையாகவே கூறுகிறார். ஐம்புலன்களில் கேட்டல் அவர் அனுபவிக்கும் துன்பத்திற்கு அடிப்படையானதை வெகுநுட்பமாகப் புலப்படுத்தியுள்ளார்.

உலகியல் வாழ்வில் காமம் பெருந்துன்பம் தருவதைப் பலர் உணர்வதில்லை. மணிவாசகர் பாடல் இதனையே எல்லோருக்கும் சிறப்பாக எடுத்துக் கூறுகிறது. இறைவன் தொழும்பர்க்கு அமுதானவன். இறைவனையே மெய்யான தனிப்பெருந்துணையாகக் கருதி இடையீடின்றி வழிபட்டு வரும் மெய்யடியார்களே தொழும்பர் ஆவர். மணிவாசகர் இப்பொருளைப் பல பாடல்களிலே பயன்படுத்தியுள்ளார். பற்றற்ற நிலையை விளக்கும் இறைவனது சுடுகாட்டுத் தோற்றத்தைப் பற்றி எண்ணியபோது அவருக்கு

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

ஒரு விளக்கம் ஏற்பட்டது. சங்காரம் செய்யும் இடமே சுடலையாக அங்கு இறைவன் மட்டுமே எஞ்சி நிற்பான் என விளக்குகிறார். இறைவன் சுடுகாட்டு அரசன் என மணிவாசகர் குறிப்பிடும்போது சுடுகாடே கோயில் என விளங்குகிறது. தமிழர்தம் பண்பாட்டில் சுடுகாடு வழிபாடு செய்யும் இடமாக விளங்கியதைப் பண்டைய இலக்கியப் பாடல்களும் பதிவு செய்துள்ளன.

அடர் புலனால் நின் பிரிந்து அஞ்சி
அஞ்சொல் நல்லாரவர் தம்
விடர் விடலேனை விடுதி கண்டாய்
விரிந்தே யெரியுஞ்
சுடர் அனையாய் சுடுகாட்டரசே
தொழும்பர்க் கமுதே
தொடர்வரியாய் தமியேன் தனி
நீக்குந் தனித்துணையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூதாட்டத்தில் பாகிஸ்தான் வீரர்

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் சூதாட்டத்தில் ஈடுபட்டதை பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் முகமது ஆசிப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார். தனது குற்றத்துக்காக நாட்டு மக்களிடம் நிபந்தனையற்ற மன்னிப்பையும் அவர் கோரியுள்ளார்.

2010 ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணி, இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடியது. அப்போது லார்ட்ஸில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் ஸ்பாட் ஃபிக்ஸிங்கில் ஈடுபட்டதாக அப்போதைய பாகிஸ்தான் அணித் தலைவர் சல்மான் பட், வேகப் பந்து வீச்சாளர்கள் முகமது ஆசிப், முகமது ஆமிர் ஆகியோர் கைது செய்யப்பட்டு, சிறைக்கு அனுபப்பட்டனர். ஆசிப் கிரிக்கெட் விளையாட ஐசிசி 7 ஆண்டுகள் தடை விதித்தது.

அந்த சம்பவம் நிகழ்ந்து 3 ஆண்டுகளுக்குப் பின்பு கராச்சியில் புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின் போது, தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட முகமது ஆசிப், "நான் செய்த தவறுக்காக ஐசிசி தீர்ப்பாயத்திடம் இருந்து 2011 இல் தண் டனை பெற்றேன்.

சூதாட்டத்தில் ஈடுபட்டு பாகிஸ்தானுக்கு அவப்பெயரை ஏற்படுத்தியதற்காகவும், பாகிஸ்தான் மற்றும் உலகம் முழுவதிலுமுள்ள கிரிக்கெட் ரசிகர்களை புண்படுத்தியதற்காகவும் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் நாட்டுக்காக விளையாடும் அனைத்து வீரர்களும் முறைகேடுகளில் இருந்து ஒதுங்கியிருக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்.



## நாடு திரும்பினர் இந்திய வீரர்கள்

இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜாகீர்கான், அதிரடி சகலதுறை வீரர் யுவராஜ் சிங் ஆகியோர் பிரான்ஸில் 6 வார கால பயிற்சியை முடித்து மீண்டும் இந்தியா திரும்பினர். இவர்கள் இருவரும் இந்திய அணியில் மீண்டும் இடம்பிடிப்பதற்காக பிரான்ஸின் பிரைவ் லா கெய்லார்டேவில் 6 வார காலம் கடும் பயிற்சி எடுத்துள்ளனர். மான்செஸ்டர் யுனைடெட் கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் ரியான் கிக்ஸுக்கு உடற்பயிற்சி அளித்தவரான டிம் எக்ஸ்டரிடம் யுவராஜும், ஜாகீரும் பயிற்சி பெற்றுள்ளனர்.

## பிரேசில் காற்பந்து அணியில் ஜாக்சன்



பிரேசில் நாட்டு காற்பந்து அணிக்காக மைக்கல் ஜாக்சன் விளையாடுகிறார்.

பிரேசில் நாட்டு காற்பந்து அணியில் விளையாடும் நபர்கள் புனைப் பெயர்களை பயன்படுத்துவது வழக்கம். இந்நிலையில் அட்லெடிகோ கோயியானி யன்ஸ் கிளப்பில் புதிதாக மைக்கேல் ஜாக்சன் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவரது உண்மையான பெயர் கார்லோஸ் அட்ரியானோ டிசோசா க்ரூஸ். இவர் அந்த அணியில் உள்ள ஜான் லெனனன், மகாத்மா காந்தி ஆகியோருடன் விளையாட உள்ளார். மைக்கேல் ஜாக்சன் ஏற்கனவே பிரேசில் காற்பந்து அணிக்கான பால்மீராஸ் மற்றும் ப்ளுமினென்ஸ் போன்ற அணிகளுக்காக விளையாடி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 14 ஆவது உலக தடகளப் போட்டியில்...

உலக தடகள சம்பியன்ஷிப் ஆண்கள் 50 கி.மீ. நடைப் போட்டியில் அயர்லாந்து வீரர் ராபர்ட் ஹெஃப்பர்னன் தங்கம் வென்றார்.

14ஆவது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டி ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் உள்ள லுஷினிகி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

போட்டியின் 5ஆவது நாளான புதன்கிழமை காலையில் நடைபெற்ற ஆடவர் 50 கி.மீ. நடைப் போட்டியில் 10ஆவது கிலோ மீற்றரில், ரஷ்யாவின் மிகைல் ரைப்ஸாவை பின்னுக்குத் தள்ளிய ஹெஃப்பர்னன், அதன்பின்பு தொடர்ந்து வேகமாக இலக்கை நோக்கி முன்னேறினார்.

550 மீற்றர் தூரத்தில் இருந்து இரு கைகளையும் உயர்த்தி தனது வெற்றிக் களிப்பை வெளிப்படுத்திய ஹெஃப்பர்னன், 3 மணி நேரம், 37 நிமிடம், 56 விநாடிகளில் இலக்கை எட்டி தங்கம் வென்றார். மிகைல் ரைப்ஸா (3:38:58) வெள்ளிப் பதக்கத்தையும், அவுஸ்திரேலியாவின் ஜார்ட் டாலண்ட் (3:40:03) வெணகலப் பதக்கத்தையும் பெற்றனர்.

இந்தப் போட்டியில் தங்கம் வென்றதன் மூலம் உலக தடகளப் போட்டியில் சம்பியன் பட்டம் (தங்கப் பதக்கம்) வென்ற 3ஆவது அயர்லாந்து வீரர் என்ற பெருமையை ஹெஃப்பர்னன் பெற்றுள்ளார். இதற்கு முன்னர் அயர்லாந்தின் எமனான் காக்லான் (5000 மீ. ஓட்டம், 1983), சோனியா ஓ"சுல்லிவான் (5,000 மீ. ஓட்டம், 1995) ஆகியோர் சம்பியன் ஆகியுள்ளனர்.

லாஷான் மெரிட்டுக்கு தங்கம்

ஆண்கள் 400 மீ. ஓட்டத்தில் அமெரிக்காவின் லாஷான் மெரிட், 43.74 விநாடிகளில் இலக்கை எட்டி தங்கம் வென்றார். ஏற்கனவே 2009 உலக சம்பியன்ஷிப் போட்டியில் தங்கம் வென்றவரான மெரிட், இந்த முறை தங்கம் வென்றதன் மூலம் மீண்டும் உலக சம்பியன் ஆகியுள்ளார். மேலும் அவர் இலக்கை எட்டிய நேரமே, 400 மீ. ஓட்டத்தில இந்த ஆண்டின் சிறந்த நேரமாகும்.

இந்தப் போட்டியில் வெள்ளிப் பதக்கமும் அமெரிக்காவுக்கே கிடைத்தது. அந்நாட்டின் டோனி மெக்காய் 44.40 விநாடிகளில் இலக்கை எட்டி வெள்ளிப் பதக்கம் வென்றார். டொமினிஸியன் குடியரசின் லுகேலின் சான்டாஸுக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.

### முதல் எதியோப்பிய வீரர்

ஆடவர் 800 மீ. ஓட்டத்தில் எதியோப்பியாவின் முகமது அமான் தங்கம் வென்றார். 1 நிமிடம், 43.31 விநாடிகளில் இலக்கை எட்டிய முகமது அமான், உலக தடகள சம்பியன்ஷிப் 800 மீ. ஓட்டத்தில் தங்கம் வென்ற முதல் எதியோப்பிய வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

இதேபிரிவில் அமெரிக்காவின் நிக்கி சைமண்ட்ஸ் வெள்ளிப் பதக்கமும், ஜிபெத்தின செலெய்மான் வெண்கலமும் வென்றனர்.




உலக தடகள சம்பியன்ஷிப் ஆண்கள் 50 கி.மீ. நடைப் போட்டியில் தங்கம் வென்ற அயர்லாந்து வீரர் ராபர்ட் ஹெஃப்பர்னன் மனைவியுடன்....

## மகளிர் ஆஷஸ் போட்டி சமநிலையில்

இங்கிலாந்தில் இடம்பெற்ற இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான மகளிர் ஆஷஷ் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது.

சேர் போல் கெற்றி மைதானத்தில் இடம் பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி சாரா எலியற்றின் 104 ஓட்டங்கள், அலெக்ஸ் பிளெக்வெல்லின் 54 ஓட்டங்கள், ஜெஸ் கமரனின் 50 ஓட்டங்கள், மெக் லெனிங்கின் 48 ஓட்டங்கள், எலைஸ் பெரியின் ஆட்டமிழக்காத 31 ஓட்டங்களின் துணையோடு 6 விக்கெட்டுக்களை இழந்து 331 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத் தாடிய இங்கிலாந்து அணி ஹீதர் நைற் இன் 157 ஓட்டங்கள், லாரா மார்ஷின் 55 ஓட்டங் கள், சாரா ரெய்லரின் 33 ஓட்டங்களின் துணையோடு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 314 ஓட்டங்களைப் பெற்றது.

17 ஓட்டங்கள் முன்னிலையில் காணப்பட்ட நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸில் ஆடிய அவுஸ்திரேலிய அணி ஜோடி ஃபீல்ட்ஸின் ஆட்டமிழக்காத 78 ஓட்டங்கள், மெக் லெனிங்கின் 36 ஓட்டங்களின் துணையோடு 5 விக்கெட்டுக்களை இழந்து 213 ஓட்டங்களைப் பெற்று இங்கிலாந்து அணிக்கு 249 ஓட்டங்களை வெற்றி இலக்காக வழங்கியது.

249 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது போட்டி முடிவுக்கு வந்தது. இப்போட்டியின் நாயகியாக இங்கிலாந்து அணியின் ஹீதர் நைற் தெரிவானார்.

### ஸ்கொட்லாந் , இங்கிலாந்து உடனான

# ஒருநாள், ரி-20 போட்டிகளுக்கான அவுஸ்திரேலிய அணி

டெஸ்ட் தொடரைத் தொடர்ந்து அவுஸ்திரேலிய அணி பங்குபற்றவுள்ள ஸ்கொட்லாந்திற்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டி, இங்கிலாந்திற்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், ருவென்ரி ருவென்ரி சர்வதேசப் போட்டிகள் ஆகியவற்றிற்கான குழாமை அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

5ஆவது ஆஷஷ் டெஸ்ட் போட்டி 25ஆம் திகதி நிறைவடையவுள்ள நிலையில் அவுஸ்திரேலிய அணி 2 ருவென்ரி ருவென்ரி சர்வதேசப் போட்டிகளில் இங்கிலாந்திற்கெதிராகப் பங்குபற்றவுள்ளது. அதன் பின்னர் ஓர் ஒருநாள் சர்வதேசப் போட்டியில் ஸ்கொட்லாந்திற்கெதிராகப் பங்குபற்றவுள்ள அவுஸ்திரேலிய அணி, பின்னர் இங்கிலாந்திற்கெதிராக 5 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளது.

இதற்கான 18 பேர் கொண்ட ஒட்டுமொத்தமான குழாமை அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது. இதில், முதலிரு ருவென்ரி ருவென்ரி சர்வதேசப் போட்டிகளையடுத்து இக்குழாமிலுள்ள வீரர்களின் எண்ணிக்கை குறைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக அவுஸ்திரேலிய "ஏ" அணி சிம்பாப்வே, தென்னாபிரிக்கா ஆகிய இடங்களில் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றியிருந்த நிலையில், அப்போட்டிகளில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்திய வீரர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

வழக்கத்தைப் போல், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் தலைவராக மைக்கல் கிளார்க்கும், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் உப தலைவராகவும், ருவென்ரி ருவென்ரி சர்வதேசப் போட்டிகளின் தலைவராக ஜோர்ஜ் பெய்லியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்:

மைக்கல் கிளார்க், ஜோர்ஜ் பெய்லி, பவாத் அஹமட், நேதன் கோல்ட்டர் நீர், ஜேம்ஸ் ஃபோள்க்னர், ஆரொன் ஃபின்ச், ஜோஸ் ஹேஷல்வூட், பிலிப் ஹியூஸ், மிற்சல் ஜோன்சன், ஷோன் மார்ஷ், கிளென் மக்ஸ்வெல், கிளின்ட் மக்காய், ஸ்டீவன் ஸ்மித், மிற்சல் ஸ்ரார்க், அடம் வோகஸ், மத்தியூ வேட், டேவிட் வோணர், ஷேன் வொற்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடு அன்னையின் ஆவணித் திருவிழா






மன்னார் மடு மாதா திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா நேற்று வியாழக் கிழமை சிறப்பாக நடைபெற்றது.

மடு திருவிழா திருப்பலி மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தலைமையில் நேற்றுக் காலை 6.30 மணிக்கு இடம்பெற்றது. இதன்போது மடு அன்னை யின் திருச்சுரூப பவனியும் நடைபெற்றது.

இதில் திருத்தந்தையின் இலங்கைக் கான பிரதிநிதி அதிவணக்கத்திற்குரிய ஜோசப் ஸ்பிற்ரேரி ஆண்டகை, கொழும்பு மறைமாவட்டத்தின் இளைப்பாறிய பேராயர் ஒஸ்வெல்ட் கோமிஸ் ஆண்டகை, யாழ் மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்திற் குரிய தோமஸ் சௌந்தரநாயகம் ஆண் டகை, கண்டி மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய வியான்னி பெர்னா ண்டோ ஆண்டகை, அனுராதபுர மறை மாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய நோபட அன்றாடி ஆண்டகை மற்றும் நூற்றிற்கும் மேற்பட்ட குருக்களும் இணைந்து திருவிழா திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

இதனைத்தொடர்ந்து மடு அனனையின் திருச்சொரூப பவனியும் இடம் பெற்றது. இதன போது சுமார் 5 இலட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டு மடு அன்னை யின் ஆசிரைப்பெற்றனர். (செ-11)

## அழகி வரும் உரு...

டங்களுக்கு மக்கள் வருவதில்லை என்ப தால், பணத்தையும் சோற்று பார்சல்களை யும் கொடுத்து பேருந்துகளில் மக்களை பல வந்தமாக ஏற்றி வர அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

தமது பக்கம் மக்கள் இருக்கினறனர் என்பதைக் காட்ட வேண்டும். அதுவே அரசா ங்கத்தின் ஒரே நோக்கம்.

தேசத்திற்கு மகுடம் என்ற கண்காட்சி என்ற வேலைத்திட்டமும் அரசாங்கத்தின் இப்படியான தோல்வியான முயற்சிகளில் ஒன்று.

தற்போது கொழும்பு தெற்கு துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதனைச் சென்று பாருங்கள் எனக் கிராமிய மக்களுக்கு அரசா ங்கம் கூறியுள்ளது.

இதற்காகப் பெரும் தொகை பணம் செல விடப்பட்டு மக்களைப் பேருந்துகளில் அழை த்து வருகின்றனர் என ஹேமகுமார நாணயக் கார மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## நீரில்..

யின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின் றார்கள். (செ-254)

## ரொபாக்கோ அணியில் மஹேல

இடம்பெற்றுவரும் கரீபியன் பிறீமியர் லீக் தொடரில் ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி சார்பாகப் பங்குபற்றுவதற்காக மஹேல ஜெயவர்தன மேற்கிந்தியத் தீவுகளை நோக்கிப் பயணமாகியுள்ளார்.

திடீரெனக் கிடைக்கப்பெற்ற அழைப்பின் காரணமாக இத்தொடரில் பங்குபற்றவுள்ள தாகத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, ட்ரினி டாட் அன்ட் ரொபாக்கோ அணி சார்பாகப் பங்குபற்றவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணியின் வெளிநாட்டு வீரராக ஏற்கெனவே இணைந்திருந்த ஆரொன் ஃபின்ச் அக்குழா மிலிருந்து விலகிய பின்னர் மஹேல ஜெய வர்தன இக்குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி சார்பில் றோஸ் ரெய்லர், கெவின் ஓ பிரை யன், டேவி ஜேக்கப்ஸ் ஆகியோரு இணை ந்து நான்காவது வெளிநாட்டு வீரராக மஹேல ஜெயவர்தன இணையவுள்ளார்.

வழக்கமான பலமான அணியான ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ இத்தொடரின் முதல் 3 போட்டிகளையும் தோல்வியடைந்த பின்னர், அடுத்த 2 போட்டிகளையும் அவர் வெற்றிகொண்டிருந்தது. எனினும் 6 அணிகள் பங்குகொள்ளும் இத்தொடரில் புள்ளிகளின் பட்டியலில் 5ஆவது இடத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அநுராத...

படைந்துள்ளது.

இதனையடுத்தே இந்த பள்ளிவாசலி னை அகற்ற அனுராதபுரம் மாநகர சபை தீர்மானித துள்ளது.

எனினும் புனித நோன்பு காலம் என்ப தனால் குறித்த தீர் மானத்தை சில நாட்களுக்கு ஒத்தி வைத்திருந்தது.

தற்போது நோன்பு பெருநாள் முடிவடைந்த நிலை யிலேயே மல்வத்து ஓயா லேன் பள்ளி வாசல் நேற்று அக றறப்பட்டுள்ளது.

குறித்த பள்ளி வசால் மீது கடந்த வருடம் ஹஜ் பெரு நாள் தினத்தன்றும் மற்றொரு நாளும் என இரண்டு தட வைகள் தாக்குதல் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (செ-11)



வட மாகாணங்களுக்கு இடையிலான பெண்களுக்கான பளு தூக்கும் போட்டியில் மகாஜனக் கல்லூரியின் மாணவி வி.சுசந்திகா தங்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

48 கிலோ எடைப் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை பெற்றுக் கொண்டார்.(23)

## பத்ரகாளி கோவி...

கோயிலை அகற்றும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த கோயி லைச் சுற்றி வாழ்ந்து வந்த 25 அப்பாவி தமிழ் குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் ரூபா வீதம் வழங்கப்பட்டு அங்கிருந்து அகற்றியுள் ளனர்.

இதனால் அவர்கள் தற்போது நிரந்தர வசிப்பிடமின்றி நிர்க்கதி நிலையை அடைந் துள்ளனர். தாங்கள் தற்போது தற்காலிகமாக தங்கியுள்ள பகுதியிலிருந்து பூசை வழிபாட் டிற் காக இந்தக் கோயிலை நாடிவருகின்றனர்.

தம்புள்ள புனித பிரதேசத்தில் கோவிலோ, பள்ளிவாசலோ இருப்பது புனிதத்துவத்தை எவ்வகையிலும் பாதிக்காது. மாறாக தம்பு ள்ள நகரில் இருக்கும் கசாப்புக் கடைகளை அகற்றாது புனித தலங்களை அகற்றுவது எவ்வகையில் நியாயமாகும்?.

சிறுபான்மை மக்கள் இன்று தமது மத வழிபாடுகளைக் கூட சுதந்திரமாக மேற் கொள்ள முடியாத ஒரு நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர். இவ்வாறான சூழலை அகற்றி தமது பிரதேசங்களில் சுதந்திரமாக மத வழிபாடுகளை மேற்கொள்வதற்கான சூழலை அமைத்துக்கொடுப்பது அரசாங்கத்தின் கடப்பாடாகும்.

இவ்வாறன செயற்பாடுகளை அரசாங் கம் கவனத்தில் எடுக்காது இருக்குமானால் பாரிய பின்விளைவு களை எதிர்நோக்க வேண்டிவரும்" என்றும் தெரிவிக்கப்பட்டு ள்ளது. (செ-11)

## நீதியான தேர்தல்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமத்துவம், நீதி, கௌரவம், சுயமரியா தையுடன் கூடிய அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்துவதன் மூலமே, இலங்கைத் தமிழர்கள் உள்ளிட்ட எல்லா குடி மக்களும் சம பங்காளராக வாழ முடியும்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல் நீதியானதாகவும் நியாயமான முறை யிலும் நடைபெறும் என நாம் நம்புகின்றோம்.

இலங்கை அரசாங்கத்தின் அண்மைக் கால அரசியல் நிலைவரங்கள் தொடர்பாக இந் தியா த்னது கருத்தை தெரியப்படுத்தியுள்ளது.

மேலும், தேசிய ஒருமைப்பாட்டினை ஏற்படுத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் குறித்த எதிர்பார்ப் பும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம், நிலையான அரசியல் தீர்வு ஒன்று காண்பதாக, இந்தியா வுக்கும், அனைத்துலக சமூகத்துக்கும் அளித்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும்.

சமத்துவம், நீதி, கௌரவம், சுய மரியா தையுடன் கூடிய அர்த்த முள்ள அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்துவதன் மூலமே, இலங்கைத் தமிழர்கள் உள்ளிட்ட எல்லா குடிமக்களும் சம பங்காளராக வாழ முடி யும் என்று தெரிவித்தார்.

போரின் முடிவு, எல்லா சமூகங்களும் இலங்கையில் நல்ல எதிர் காலத்தை உரு வாக்கிக் கொள்வதற்கான இணையற்ற வாய்ப்பை வழங்கியுள்ளது என்றும் இந்திய உயர்ஸ்தானிகர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.





வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட கனிஷ்ட மெய்வல்லுநர் மாணவர்கள் 25 பேருக்கான குறுந்தூர ஓட்டப் பயிற்சி முகாம் நேற்று நடைபெற்றது.

இதில் தேசிய ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜெயசிங்க கலந்துகொண்டு மாணவர்களுக்கான பயிற்சிகளை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரிக்கற் இலவசம், சாப்பாடு இருப்பிடம் இலவசம்

## 2 இலட்சம் சம்பளம்

டென்மார்க்கில் படிக்க உழைக்க இன்னும் சில தினங்கள் மாத்திரம் இந்த வாய்ப்பு

(C-4333)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 2219016, 0215689090


# 'லக்ஸ்பான'... எலும்புக்...

கந்தசுவாமி கோவில் பகுதியுட்பட்ட சில பகுதிகளுக்கு லக்ஸபான மின்சாரம் வழங்கப் படடு வருகின்றது எனவும் தேசிய மின்சார கட்டமைப்புடன் குடாநாட்டின் மின்சார விநியோகம் இணைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை நீரிலிருந்து உற் பத்தி செய்யப்படும் மின்சாரம் போது மானதாக இல்லை எனவும் இதனால் மின்பிறபாக்கிகள் ஊடாகவும், அனல் மின் உற்பத்தி ஊடாகவும் மின்சாரம் பெறப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்தச் சந்திப்பில் யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் எஸ்.ஞானகணேசன் உட்பட இலங்கை மின்சார சபையின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (செ-6)

தரப்பினரால் மறைக்கப்பட்டுள்ளன என ஊடகங்களுக்கு தகவல்கள தெரிவிக்கப்பட்டன.

எனினும் அதை உடனடியாக உறுதிப்படுத்த முடியவில்லை.

ஊடகவியலாளர்கள் சம்பவ இடத்திற்கு சென்று சம்பவத்தை அறிய முயன்ற போது பிரதேச வாசிகள் குறித்த விடயம் குறித்து பதிலளிக்காது ஒதுங்கியே சென்றனர். (செ-6,11,24)


சித்தியம்புளியடி தெல்லிப்பழை கிழக்கு கலைச்செல்வி சனசமூக நிலைய வளர்ச்சி நிதிக்கான

**மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி**

காலம் :
18-08-2013-ம் திகதி
ஞாயிற்றுக்கிழமை

நேரம் :
பிற்பகல் 01.00 மணி

இடம் :
பொன்னாலை மான்பாய்ந்தவெளி சவாரித்திடல்

அன்பளிப்பு : 20/=

(3625)

Note:
A பிரிவில் 1-ம் இடத்தினைப் பெறும் போட்டியாளருக்கு துவிச்சக்கர வண்டியும் ஏனைய பிரிவில் வெற்றி பெறும் போட்டியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களும் வழங்கப்படும்.



**வடக்கின் இளைஞர் யுவதிகளுக்கோர் வரப்பிரசாதம்!!**

**தவறவிடாதீர்கள்!**

ஜப்பான் வீசா

வயது எல்லை 18 - 35

17.08.2013 அன்று காலை 10.00 மணி - மதியம் வரை
யாழ் கருத்தரங்கைத் தொடர்ந்து
கிளிநொச்சி கூட்டுறவு கலாச்சார மண்டபத்தில்
இடம் பெறவிருந்த இலசவ கருத்தரங்கு

தவிர்க்க முடியாத காரணத்தினால்

**இடைநிறுத்தப்பட்டுள்ளது**

என்பதனை
மனவருத்தத்தோடு அறியத்தருகின்றோம்.



ஜப்பான் வீசா

**AKIKO JAPANESE LANGUAGE & TRAINING CENTER (PVT) LTD.**
No.51/2, Old Camp Road, Dalugama, Kelaniya.
Web: www.akiko.lk E-mail: akiko.shermila@gmail.com

தொடர்புகளுக்கு:
தர்ஷினி - 077 445 2087 (யாழ்ப்பாணம், வடபிராந்தியம்)
ஸ்ரீதரன் - 077 193 8290 (கொழும்பு)
விக்டர் - 077 154 0951 (கிளிநொச்சி)

(C-4334)



## மாகாண சபைத் தேர்தல் 2013

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

சூசைமுத்து அலெக்ஸ்சாண்டர் (சாள்ஸ்)

தென்மராட்சி அமைப்பாளர்
(ஈ.பி.டி.பி)



X 8



எக்கால கட்டத்திலும் பலவிதமான நெருக்கடியிலும் எங்கள் பிரதேசத்தில் இருந்தே அன்றும் இன்றும் மக்களின் எண்ணங்களைக் கருத்திற்கொண்டு துணிச்சலுடன் பல அபிவிருத்தி பணியிலும் வாழ்வாதார மேம்பாட்டிலும், அரசியல் உரிமையிலும் முன்னின்று அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருபவரின் வெற்றிப்பாதையை நோக்கி வாக்களிப்போம்.

(e-005) மீள்குடியேற்ற மக்கள், தென்மராட்சி கிழக்கு.



**இந்தியா செல்லும் பயணிகளுக்கு**

யாழ் மக்களுக்காக
24 மணித்தியாலய சேவையை
விஸ்தரித்துள்ளோம்

கொழும்பு - சென்னை
Colombo-Chennai RTN
1600/=

HNB
Special Offer for Credit Card holders!

(C-4339)

**Nation Popular Travels & Tours**
#128, Brown Road, Jaffna
**0214 920 920**


# 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

## இராசையா உதயமனோகரன்
## (மனோ)

தெய்வமாகிப்போன எங்கள் மனோகரனே
ஓர் திங்கள் முடிந்துவிட்டது – ஆனால்
நம் துயரம் இன்னும் முடியவில்லை
நீ இல்லாமல் போய்விட்டதாய் ஊர் சொல்கிறது
ஆனால் இன்னமும் காலை நேர கனவாய் வந்து
அழகாக்குகிறாய் நம் நாட்களை
அன்பின் வாசலாய் எமை ஆதரித்த தெய்வமே
உன் ஆத்மா சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

கடந்த 17.07.2013 இல் சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு நேரில் வந்து ஆறுதல் கூறியோர், உதவி ஒத்தாசை புரிந்தோர், வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் இருந்து தொலைபேசிமூலம் ஆறுதல் தெரிவித்தோர் துண்டுப்பிரசுரம் வெளியிட்டு அனுதாபம் தெரிவித்தோர் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

தோற்றம்
1961–05–31

மறைவு
2013–07–17

கோட்டைக்காடு,
மல்லாகம்.

தகவல் :
அம்மா, சகோதர, சகோதரிகள்.

(3623)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.